Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/848)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 31 செவ்வாய்கிழமை (16.08.2011) பக்கங்கள் 16 ஓசை – 331



மனம் திறக்கும் கூடைப்பந்து வீரன் (06)



ஊழலை வேரோடு அறுக்க வழி என்ன? (12)



தேர்தல் ஆணையரின் முடிவு தவறு (08)



பேச்சை முறித்து ஆயுதப் போராட்டமா? (14)

# 'உதயன்' குகநாதனைத் தாக்கியோர் பிடிபட்டனர்



## தாக்குதல் மர்மம் துலங்குகிறது

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 29 ஆம் திகதி மூத்த ஊடகவியலாளரும் உதயன் செய்தி ஆசிரியருமான குகநாதனைத வீதியில் வைத்துத் தாக்கிய இருவரையும் யாழ். பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர். சின்னவன் என்று அழைக்கப்படும் இரத்தினசிங்கம் சந்திரகுமார் மற்றும் நிக்ஷன் ஆகிய இருவருமே குகநாதனைத் தாக்குவதற்காகக் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

குகநாதனைத் தாக்கியவர்கள் கைதானமை குறித்து மேலும தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டுப் பல தடவைகள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட கல்வியங்காட்டைச் சேர்ந்த சின்னவன் என்று அழைக்கப்படும் இரத்தினசிங்கம் சந்திரகுமார் என்பவருடன் பேரம் பேசப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் பணம் கொடுக்கப்பட்டு மேற்படி உதயன் செய்தி ஆசியரியரைத் தாக்குவதற்கான பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாகத் தெரியவருகிறது.

நேற்றுக் கைதுசெய்யப்பட்ட தாக்குதலில் சம்பந்தப்பட்ட சின்னவன் கடந்த 5 ஆம் திகதி பிறிதொரு சம்பவத்தில் காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் இங்கிருந்து மருத்துவர்களின் சிபார்சுடன் கொழும்பு களுவேவல வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். அங்கு மேலதிக சிகிச்சை பெற்றுவந்த சின்னவனை யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குற்றவாளி யாழ். மருத்துவ மனையிலிருந்து கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டமை தொடர்பாகவும், பொலிஸார் விசாரித்துவருகின்றனர். சின்னவனின் கைதினைத் தொடர்ந்து அவரது சகாவான நிக்ஷன் என்பவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

இவர்கள் இருவரும் தற்போது தீவிர விசாரணைக்கு உபடுத்தப்பட்டு வருவதாக வடமாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினிசில்வா தெரிவித்தார். இத்தாக்குதல் திட்டத்தின் சூத்திரதாரிகள் தொடர்பாகவும், இச் சந்தேகநபர்களை கைக்கூலிகளாகப் பயன்படுத்தியவர்கள் யார் என்பது குறித்துக் கண்டறியும் (15ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் இன்று ஆர்ப்பாட்டம்

**ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும், உதயன் செய்தியாசிரியர் குகநாதன் மீதான தாக்குதலைக் கண்டித்தும் இன்று யாழ்நகரில் சுதந்திர ஊடக இயக்கம் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துகின்றது.**

இவ் ஆர்ப்பாட்டம் இன்று முற்பகல் 11.00 மணியளவில் யாழ்ப்பாண பஸ் நிலையத்தின் முன்பாக இடம்பெறவுள்ளது. தென்னிலங்கையில் இயங்கும் பிரதான ஐந்து ஊடக அமைப்புக்களும் மற்றும் குடாநாட்டின் ஊடகவியலாளர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.

ஏற்கனவே குகநாதன் மீதான தாக்குதலை கணடித்து இவ்வாறானதொரு ஆர்ப்பாட்டம் கொழும்பில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்)

## தெரிவுக்குழு அமைக்கும் முன் எம்முடன் பேசவேண்டும் என்கிறது கூட்டமைப்பு



பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றுவரை எந்த விதமான எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லையெனத் தெரிவித்திருக்கும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஆனால் தெரிவுக்குழு தொடர்பில் விளக்கமளித்து எம்முடன் கலந்துரையாடுவது அவசியமானது எனக் கூறியுள்ளார். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் காலம், அதில் ஆராயப்பட விருக்கும் விடயங்கள், இதனூடாக அரசாங்கம் வடக்கு, கிழக்கிற்கு என்ன செய்யவுள்ளது போன்ற விடயங்கள் குறித்து அரசாங்கம் எம்முடன் கலந்துரையாடல்களை நடத்த வேண்டுமென்றே தாம் கோருவதாக அவர் தெரிவித்தார். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை அமைப்பது மிகவும் சிறப்பான விடயம். ஆனால், அதற்கு முன்னர் அது பற்றி பேச்சுவார்த்தை நடத்துவது அவசியமானது என்றும் அவர் தனது செவ்வியில் கூறியுள்ளார். கொழும்பு ஒப்சேவர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்திருக்கும் (15ஆம் பக்கம் பார்க்க)

## கடற்தொழிலுக்கு செயற்திட்டம்

வடக்கில் கடற்தொழில் துறையை மேலும் விருத்தி செய்யப் புதிய பல செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாண மீன்பிடித்துறை வழமைக்கு திரும்புவதாக மீன்பிடித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த (15ஆம் பக்கம் பார்க்க)

## வரட்சியின் பிடியில் நெடுந்தீவு நீர் இன்றி கால்நடைகள் மடிவு

நெடுந்தீவுப் பிரதேசத்தில் நாளுக்கு நாள் கால்நடைகள் இறந்து வருவதாக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வரட்சியான தன்மையும், மேய்ச்சல் நிலங்களில் புற்கள் இல்லாமையுமே இதற்குக் காரணமாகும் என்று கூறப்படுகின்றது.

இதன் காரணமாக இங்குள்ள மாடுகள், ஆடுகள் குதிரை போன்றன சாப்பாட்டிற்கு எதுவும் இன்றி அங்குள்ள பொலித்தீன் பை, பேப்பர்கள் சாப்பிடுவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இங்குள்ள குளங்கள், கேணிகள் மற்றும் நீர் நிலைகள்வற்றிக காணப்படுவதால் இவற்றுக்கான நீர் பற்றாக்குறை உள்ளது. இதனால் வீதிக்கு வீதிகள் கால்நடைகள் இறந்து கிடக்கின்றன. இதனால் இப்பிரதேசத்தில் துர்நாற்றம் வீசுவதுடன், சுகாதாரப் பிரச்சினைகளையும் அம்மக்கள் எதிர்கொள்கின்றனர். (15ஆம் பக்கம் பார்க்க)

## மடுவில் திரண்ட பக்தர்கள்



(கொழும்பு)

வரலாற்று புகழ்மிக்க மடுமாதாக்கோவில் வருடாந்த ஆவணி மாத உற்சவத்தின் மாதா திருச்சொரூப பவனியும் ஆசீர்வாதமும் நேற்றுக் காலை இடம்பெற்றது. பல பகுதிகளையும் சேர்ந்த சுமார் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் மடுவில் கூடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் சமாதான சூழல் காரணமாக வெளி இடங்களிலிருந்து வரும் பக்தர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். பக்தர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன என ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. கொழும்பு பேராயர் வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில், திருப்பலி பூஜைகள் நடைபெற்றன. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் திருப்பலி பூஜை நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.


# சமுர்த்தி குடும்பங்களுக்கு இவ்வாரம் பணக்கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் யூலை, ஓகஸ்ட் மாத்திற்குரிய சமுர்த்தி முத்திரை காசுப் புள்ளிகளுக்கான பணக்கொடுப்பனவுகள் இவ்வாரம் முதல் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மாதாந்தம் வழங்கப்படுகின்ற பணக்கொடுப்பனவுகளைச் சில பயனாளிகள் உரிய காலத்தில் வங்கிகளில் வந்து பெற்றுக்கொள்வதில்லை எனவும், பணக்கொடுப்பனவுகள் வழங்கப்படும் காலத்தில் வங்கிகளுக்குச் சமூகமளிப்பதன் மூலம் பயனாளிகள் வீண சிரமங்களையும், காலதாமதங்களையும் தவிர்த்து தங்களுக்குரிய பணக்கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ள முடியுமென்று வங்கிச் சங்கங்களின் முகாமையாளர்கள் அறிவித்துள்ளனர். (26)

# தையல் பயிற்சியை நிறைவுசெய்த யுவதிகளுடன் அமைச்சர் சந்திப்பு



(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தையல் பயிற்சியினை நிறைவு செய்த நெடுந்தீவு யுவதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பு நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது. இப்பயிற்சி நெறியில் கலந்துகொண்ட 46 யுவதிகளும் தமது தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாக அமைச்சர் உள்ளிட்ட குழுவிடம் விளக்கினர்.

இதேவேளையில், இந்நிகழ்வில் கலந்துகொண்ட யுவதி ஒருவர், தாங்கள் காலிக்கு சென்று வந்த பயண அனுபவத்தையும் கூறி, இதற்கு ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

மேலும், இவ்யுவதிகள் தொடர்ந்து சுயதொழிலை மேற்கொள்ளும் முகமாக, அப்பகுதியில் கடற்படையினரால் அமைக்கப்பட்டு வரும் ஆடை உற்பத்தி நிலையத்தையும் ஆளுநர் சகிதம் அமைச்சர் சென்று பார்வையிட்டார்.

இந்தநிகழ்வில், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் (உதயன்), அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, வடமாகாண கடற்படைத் தளபதி அட்மிரல் ரவி விஜயகுணவர்த்தன, ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) உள்ளிட் டோரும் கலந்துகொண்டனர்.

இக்குழுவினர் நெடுந்தீவில் பல அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது. (எ.ப், எஸ்)


# கரவெட்டியில் விபத்து சிறுவன் படுகாயம்

(கரவெட்டி)

கரவெட்டி வடக்குப் பகுதியில் 11 வயதுச் சிறுவன் வீட்டின் பிளாட்டில் விளையாடும் போது பிளாட் விழுந்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கரவெட்டி வடக்குப் பகுதியைச் சேர்ந்த தெய்வேந்திரன் நிலக்ஷன் (வயது-11) என்ற சிறுவனே வீட்டின் பிளாட்டில் ஏறி விளையாடிக் கொண்டிருக்கும் போது பிளாட் உடைந்து சிறுவனின் மேல் விழுந்துள்ளது. சிறுவன் படுகாயங்களுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)



நோன்பு மனிதனுக்கு ஒரு கேடயமாகும். இதன்மூலம் ஷைத்தானின் தீய எண்ணங்களிலிருந்து மீட்சிபெற முடியும். பொய் பேசுவதும், புறம் பேசுவதிலிருந்தும் நீங்கியிருப்பதனால் கேடயம் உடையாமல் பாதுகாக்கப்படும். (105)

## நாவாந்துறையில் பரபரப்பு

யாழ்.நாவாந்துறை மத வழிபாட்டுத்தலம் ஒன்றில் கேட்ட வெடிச் சத்தத்தினால் அப்பிரதேச மக்கள் அச்சமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று மாலை 7.30 மணியளவில் இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, நேற்றைய தினம் இரவு நாவாந்துறைப் பிரதேசத்தில் உள்ள தேவாலயத்தில் ஒரு சிறப்புப் பூசை ஒன்று இடம்பெற்றுள்ளது. அச்சமயம் அதனைக் கொண்டாடும் பொருட்டு சக்திவாய்ந்த சீன வெடிகள் கொழுத்தப்பட்டன.

அமைதியாக இருந்த அந்தப் பிரதேசத்தில் திடீரெனக் கேட்ட சத்தத்தினால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நீடித்தது

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

இப்பரீட்சைக்கு நியமிக்கப்பட்ட வலிகாமம் கல்வி வலயம், கோப்பாய்க் கல்விக் கோட்டம் என்பவற்றைச் சேர்ந்த சகல மேற்பார்வையாளர்களும், இணைப்பு நிலைய உத்தியோகத்தர்களும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## எரிபொருளுக்கு இனி பற்றுச்சீட்டு

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாடிக்கையாளர்களுக்குப் பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பெற்றோலிய வளத்துறை அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்விடயம் தொடர்பில் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் பெற்றோலிய வளத்துறை அமைச்சின் சந்தைப்படுத்தல் பிரிவு அறிவித்தல் வழங்கியுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




### தெய்வீக இசையரங்கு

நல்லூர் முருகன் மஹோற்சவ காலத்தில் இளங்கலைஞர் மன்றத்தினால், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் தினமும் மாலை 6.30 மணிமுதல் 8.00 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தெய்வீக இசையரங்கு நடைபெற்று வருகிறது.

13 ஆம் திருவிழாவான இன்று எஸ்.நாகராசாவின் பாட்டுக் கச்சேரியில்,

வயலின் - ஏ.ஜெயராமன், மிருதங்கம் - என்.சதீஸ்குமார், கெஞ்சிரா - ஆர்.சிவராமன் ஆகியோர் பக்கவாத்தியக் கலைஞர்களாக பங்குபற்றவுள்ளனர்.

❖ ❖ ❖ ❖

'சொண்ட்' நிறுவனத்தின் அனுசரணையுடன், 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெற்று வரும் ஆன்மீகச் சொற்பொழிவில், 13 ஆம் திருவிழாவான இன்று "முருகனும் தமிழும்" என்னும் பொருளில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் சொற்பொழிவாற்றவுள்ளார்.

❖ ❖ ❖ ❖

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் தினமும் மாலை 3.00 மணி முதல் 6.00 மணி வரை நடாத்தும் சமயச் சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில், 13 ஆம் திருவிழாவான இன்று "சமயவாழ்வின் அவசியம்" என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் நித்தியதசீதரன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து நடைபெறும் கலைநிகழ்வுகளில் காரைநகர் புகழி சிவசுப்பிரமணிய அறநெறிப்பாடசாலை மற்றும் கோப்பாய் சித்திர வேலாயுதசுவாமி அறநெறிப் பாடசாலை, மாதகல் சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.


**இலங்கை மின்சார சபை**
**CEYLON ELECTRICITY BOARD**

## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் வீதி அகலிப்பு மற்றும் வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

**17.08.2011 (புதன்கிழமை), 19.08.2011 (வெள்ளிக்கிழமை)**

சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி.

**20.08.2011 (சனிக்கிழமை)**

உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ்.மாநகரப் பகுதி, ஸ்ரான்லி வீதி.

**21.08.2011 (ஞாயிற்றுக்கிழமை)**

சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுகோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ்.பட்டணப்பகுதி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம்.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு
கைகொடுக்கும் இலங்கை மின்சாரசபை"

**மின் பொறியியலாளர்,**
**யாழ். பிரதேச அலுவலகம்,**
**இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்.** (C/558)


## வீதி செப்பனிடல்

யாழ்.மரியன்னை பேராலய வருடாந்த பெருந்திருநாள் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

அதனையொட்டி மாலை அன்னையின் திருச்சொரூப ஊர்வலம் நடைபெறுவதற்காக அவசர அவசரமாக சில வீதிகள் பகுதியளவில் செப்பனிடப்பட்டதைக் காண முடிந்தது.

அவ்விதம் அச்சுக்கூட வீதி, பாங்ஷால் வீதி, சென்.பற்றிக்ஸ் வீதி என்பன நேற்றுச் செப்பனிடப்பட்டன. குருசோ வீதி மட்டும் இரண்டு தினங்களுக்கு முன்பாகச் செப்பனிடப்பட்டிருந்ததும் சுட்டிக் காட்டத்தக்கது. (68)

## வீதி விபத்து; ஒருவர் காயம்

இலங்கை மின்சார சபை ஊழியர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் குஞ்சர் கடைக்கு அருகாமையில் நடந்த வாகன விபத்தில் காயமடைந்து பருத்தித்துறை மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு காயமடைந்தவர் பொன்னுத்துரை (வயது-51) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் வீதிக்கரையில் அமர்ந்திருந்தபோது மிக வேகமாக வந்த ஹயேஸ் வான் மோதிவிட்டுத் தரிக்காது பருத்தித்துறையை நோக்கிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

**வேலை செய்யாமல் அரைநொடி கூட இருக்கக்கூடாது. விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் உனக்கென்று இறைவனால் தரப்பட்டுள்ள பணியை செய்து கொண்டே இருக்கவேண்டும்.**

-பாரதியார்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# ஊடகம், சுதந்திரம், வன்முறை!

சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியம் இன்று காலை 11.00 மணிக்கு யாழ்.நகரில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தவிருப்பதாகத் தெரிவித்துள்ளது. கடந்த 29.07.2011 உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் இனந்தெரியாத இரு நபர்களால் தாக்கப்பட்டதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அமைதியான வாழ்வையும், ஜனநாயகத்தையும் விரும்புகிற மக்கள் அனைவரும் இத்தகைய தாக்குதல்களைக் கண்டிப்பதற்கு முன்வரவேண்டும். தாக்குதல் நடத்தியவர்கள் மற்றும் அதைத் தூண்டிவிடுபவர்கள், ஊக்குவிப்பவர்கள் அனைவரும் ஊடக சுதந்திரத்திற்கு மட்டுமல்லாமல் பொதுவான மனித சுதந்திரத்திற்கே அச்சுறுத்தலாக உள்ளனர்.

கொலைகளைக் கூட கண்டிக்க முடியாத, எதிர்ப்புத் தெரிவிக்க முடியாத அச்சம் நிறைந்த அராஜகச் சூழலிலிருந்து மீண்டு, பெரும் சிரமங்களின் மத்தியில் உருவாகி வருகின்ற இயல்பு வாழ்வையும் அமைதிச் சூழலையும் கெடுப்போரை நாம் வாளாவிருந்து அனுமதிக்கக்கூடாது.

தினமுரசு, அதன் ஸ்தாபக ஆசிரியர் அற்புதனையும், பின்னர் சின்னபாலா என்றழைக்கப்பட்ட பாலநடராஜா ஐயரையும் இத்தகைய வன்முறைகளுக்குப் பலிகொடுத்தது. அப்போது அந்தக் கொலைகளுக்காகக் கண்டனம் தெரிவிக்கவோ ஆர்ப்பாட்டம் செய்யவோ யாரும் முன்வராத நிலையே காணப்பட்டது.

அப்படியானதொரு பாரபட்சமான கண்டனச் சூழல் இன்றில்லை. ஊடகவியலாளர்கள் மட்டுமல்லாது பொதுமக்களும் முன்வந்து இத்தகைய தாக்குதல் சம்பவங்களைக் கண்டிக்கவேண்டும். பல கொலைகளையும், அநீதிகளையும் கண்டிக்காமல் ஒதுங்கி ஒதுங்கியே எமது சமூகம் பயங்கரவாதச் சமூகம் என்று பெயரெடுக்கும் அளவுக்கு தனக்குள் அநீதியை வளரவிட்டுக் கொண்டது. அதனை இன்று நாம் எல்லோருமே உணர்ந்துகொள்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் திரு.குகநாதன் மீது தாக்குதல் நடத்தியவர்களை யாழ். பொலிஸார் கைதுசெய்திருப்பதாக செய்தி வந்துள்ளது. சின்னவன் மற்றும் நிக்சன் என்ற இரு முன்னாள் குற்றவாளிகளே தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இவர்கள் கூலிக்காகத் தாக்குதலை நடத்தியவர்கள். பொலிஸாரின் விசாரணையிலிருந்து, இவர்களை ஏவியவர்கள் யாரென்ற உண்மை விரைவில் வெளிவந்துவிடும். அவர்களையும் கண்டுபிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். மீண்டுவரும் இயல்புச் சூழலை இவ்விதம் குறுகிய நோக்கங்களுக்காகப் பாழாக்கி விட முயலுபவர்களை அனுமதிக்கலாகாது.

திரு.குகநாதன் தாக்கப்பட்டவுடன் எவ்வித விசாரணையும் ஆய்வுமின்றியே "இது தேர்தலில் தோல்வியுற்றவர்களின் வேலை" எனவும் தடாலடியாக குடாநாட்டில் வெளிவரும் பத்திரிகை ஒன்று எழுதியது. இத்தகைய பொறுப்பற்ற விதத்தில் உள்நோக்கங்களுடன் அவதூறுச் செய்தி பரப்புபவர்களும் ஒருவகையில் அமைதிக்கு விரோதமானவர்களே. இன்றைய கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது இத்தகைய அறக் கட்டுப்பாடற்ற ஊடகங்களும் சேர்த்தே கண்டனம் செய்யப்பட வேண்டும்.

விற்பனைக்காக, சுயலாபங்களுக்காக சமூகத்தின் எல்லாப் பலவீனங்களையும் சுரண்டிப் பிழைக்கும் ஊடகங்கள் குறித்து மக்கள் அவதானமாக இருக்கவேண்டியுள்ளது.

பத்திரிகைச் சுதந்திரத்தை விட பத்திரிகைகளிடமிருந்து சுதந்திரம்தான் இன்று மக்களுக்குத் தேவையாக இருக்கிறது என்று சொல்லப்படுவதை நாம் மறுக்க முடியாதவாறு தான் நிலைமை இருக்கிறது.

- ஆசிரியர்

# சட்டவிரோத மது விற்பனையை கட்டுப்படுத்த யாரும் இல்லையா?

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பல பிரதேசங்களில் சட்ட விரோதமான முறையில் சாராயம் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கற்சிலை மடுப் பிரதேசத்தில் குளிரூட்டப்பட்ட நிலையில் கூட உயர்ரக மதுபானம் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், இதனால் இளைஞர்கள் இவற்றை வாங்கிக் குடித்துவிட்டு போத்தல்களை வீதியில் போடுவதாகவும் போதை தலைக் கேறியபின் வீதிகளில் அட்டகாசம் புரிவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக 21 வயதிற்கு குறைந்த இளைஞர்களே அதிகளவில் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி வருவதாகவும் இது ஒரு நாகரிகமான செயல் என அவர்கள் கூறிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (101)

## சிவப்பிரகாசம் வீதியின் அவலம் எப்போது தீரும்?

(குருநகர்)

யாழ். வண்-வடமேற்கு சிவப்பிரகாசம் வீதிப்போக்குவரத்தை மேற்கொள்ள இயலாத அளவுக்கு மிகவும் மோசமாகப் பழுதடைந்துள்ளது. பழுதடைந்து பல மாதங்களாகியும் வீதி அபிவிருத்திச் சபையோ, யாழ். மாநகரசபை வேலைப் பகுதியினரோ இந்த வீதியை மாற்றாந்தாய் மனப்பான்மையில் கவனியாமல் விட்டுவிட்டதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சமீபத்தில் அவ் வீதியால் சைக்கிளில் சென்ற ஒருவர் எதிரே வந்த வாகனத்தை விலத்திப் போகையில் பள்ளத்துள் சைக்கிள் வீழ்ந்து இரண்டு பற்களை இழந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இரவு வேளைகளில் வீதியில் இருக்கும் பள்ளங்களைத் தெரியாமல் அதில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளாகும் பிரயாணிகள் அதிகம் பல தடவை இது சம்பந்தமான அறிவித்தல்கள் செய்யப்பட்டும் இன்னமும் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படாமல் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (68)

## இலவச யோகாசன வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் இலவச யோகாசன வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. கிழமைநாட்களில் காலை 6.00 மணிக்கு இந்த வகுப்புக்கள் இடம்பெறுகின்றன.

வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நடைபெற்ற வகுப்புக்கள் நடைபெற மாட்டாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்களில் ஆண் பெண் இருபாலரும் இணைந்து கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (08)

## பளைக்கோட்டத்தில் இரண்டு பாடசாலைகள் அடுத்த தவணை ஆரம்பம்

(அம்பலப்பெருமாள்)

பளைக்கோட்டத்தில் இயங்காதுள்ள நான்கு பாடசாலைகளில் இரண்டு பாடசாலைகள் எதிர்வரும் மூன்றாம் தவணையுடன் இயங்கவுள்ளதாக பளைக் கோட்டக்கல்வி அலுவலர் சு.ஆனந்தசிவம் தெரிவித்துள்ளார்.

பளைக் கல்விக் கோட்டத்தில் உள்ள அல்லிப்பளை, கிளாலி, வேம்பொடுகேணி, முகமாலை ஆகிய நான்கு பாடசாலைகள் கடந்த கால போர் அனர்த்தங்களினால் மூடப்பட்டுள்ள நிலையில் அல்லிப்பளை, கிளாலி ஆகிய கிராமங்களில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இக்கிராமங்களிலுள்ள அல்லிப்பளை அ.த.க. பாடசாலை மற்றும் கிளாலி அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகள் மீளவும் இயங்கவுள்ளதாக கோட்டக் கல்வி அலுவலர் மேலும் தெரிவித்தார். (121)

## நஷ்டத்தில் இயங்கும் பூநகரி ப.நோ.கூ.சங்கம்

(முழங்காவில்)

பூநகரி ஜெயபுரத்தில் இயங்கி வரும் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் பாரிய நஷ்டத்தில் இயங்கிவருவதாக தெரிவிக் கப்படுகிறது. கடந்த மே,யூன், யூலை மாதங்களில் 25 இலட்சத்துக்கு மேல் நஷ்டமேற்பட்டுள்ளதால் பணியாளர்களுக்கான வேதனத்தை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யூலை மாத வேதனம் இன்று வரை வழங்கப்படாததால் தாம் பெரும் சிரமத்தை அனுபவிப்பதாக பணியாளர்கள் தெரிவித்தனர். 60 க்கு மேற்பட்ட பணியாளர்கள் இச் சங்கத்தில் சேவையாற்றுவது குறிப்பிடத்தக்கது. (112)

## கோம்பாவிலில் வெடிக்காத வெடிபொருட்கள் அச்சத்துடன் வாழும் மீளக்குடியமர்ந்த மக்கள்

(புதுக்குடியிருப்பு)

அண்மையில் மக்கள் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்கடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவில் கோம்பாவில் கிராமத்தில் வெடிக்காத வெடிபொருட்களின் அச்சுறுத்தல்காணப்படுவதாக அப்பகுதியில் மீள் குடியோறிய மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மீள் குடியமர்த்தப்பட்ட மக்கள் அங்கு தமது காணிகளை துப்பரவு செய்ய முற்பட்ட வெளை பல்வேறு வெடிக்காத வெடிபொருட்கள் காணப்பட்டதை அடுத்து அருகில் இருந்த படையினருக்க தகவல் கொடுத்துள்ளதாகவும் மேலும் துப்பாக்கி ரவைகள் அங்கு தாராளமாக நிலத்தில் புதையுள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அடையாளம் கட்டப்பட்ட வெடி பொருட்கள் மீட்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் மீள் குடியேறிய மக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

இதேவேளை கோம்பாவில் பிரதேசத்தில் இரவு நேரங்களில் யாணைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## கடல் உணவுகளின் விலை குடாநாட்டில் வீழ்ச்சி

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு வாரங்களாக கடல் உணவுப் பொருட்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மக்களில் பெரும் பாலான சைவசமயிகள் மாமிச உணவை நிறுத்தியுள்ளமையே கடலுணவுகளின் விலை வீழ்வ்விக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

திருநெல்வேலி, கல்வியங்காடு பொது மின் சந்தைகளில் மீன் வகைகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை கருவாட்டின் விலை அதிகரித்து வருகிறது. யாழ். குடாநாட்டுக்கு வருகைதரும் தென்னிலங்கைச் சுற்றுலாப்பயணிகள் அதகளவில் கருவாட்டினைக் கொள்வனவு செய்வதே இந்த விலை அதிகரிப்புக்கும் காரணம் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (10)

## நல்லூர் ஆலய சூழலில் போலிச் சாஸ்திரிகள்

(நல்லூர்)

நல்லூர் ஆலய சுற்றாடலில் போலி இந்திய சாஸ்திரிமார்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றன.

ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு தாம் பெயர் பெற்ற சாஸ்திரிமார் எனக் கூறிப் பொய்யான சாஸ்திர வார்த்தைகளைக் கூறி பணம் வசூலிப்பதில் இந்த ஆசாமிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போலி ஆசாமிகளிடம் சிலர் சிக்கித் தேவையற்ற வகையில் பெருந்தொகையான பணங்களை செலவழித்தும் உள்ளனர்.

நல்லூர்க் கந்தனை தரிசிக்க வரும் பக்தர்கள் இத்தகைய போலி சாஸ்திரிமார்களிடம் சிக்க வேண்டாம் என்று பக்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வி)

# வன்னியில் தொடரும் மழையால் நெல் அறுவடை பெரும் பாதிப்பு

## விவசாயிகள் ஆழ்ந்த கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் பெய்துவரும் கனமழையை அடுத்து அங்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் சிறுபோக நெல் அறுவடை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டதன் பின்னர் பெருமளவான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் அறுவடை தற்சமயம் விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வேளை நேற்றுமுன்தினம் முதல் கன மழைப்பொழிவு இடம்பெற்றுவருவதன் காரணமாக சிறுபோக நெல் அறு வடை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.


இதேவேளை ஓட்டுசுட்டான் முத்தையன்கட்டுப் பகுதிகளில் நெல் அறுவடைபாதிக்கப்பட்டுள்ளதுடன் கூடாரங்களில் வாழ்ந்து வந்த மக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் இப்பிரதேசங்களிலுள்ள வயல் நிலங்களுக்கு நீர் தேவையாக இருந்தபோது மழை இல்லாது இருந்த நிலையில் தற்போது அறுவடை செய்யப்பட்டு வரும் நிலையில் மழை பெய்துள்ளதால் நெல் அறுவடை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாக மூன்று மணிநேரம் பெய்த அடை மழையினால் தறப்பாள்கள் மற்றும் தகரங்களினால் அமைக்கப்பட்ட வீடுகளின் கூரைகள் காற்றுடன் அடித்துச்செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிராமங்களிற்குள் வெள்ளநீர் உட்புகுந்ததால் அங் கிருந்த குடிமனைகளில் வாழ்ந்த மக்களின் உடைமைகள் நீரில் நனைந்து வாழ இடமில்லாது பெரும் கஷ்ட நிலையை எதிர்கொண்டுள்ளதாகவும்தெரியவருகின்றது. (பா,40,101)

## நல்லூர் கந்தனுக்கு இன்று 13ஆம் திருவிழா



ஓங்கார - பவனாய் நல்லூர் பதியில்
வீற்றிருக்கும் கந்தனை நித்தமும்
நிந்தனை செய்யுங்கள்
துன்பங்கள் எல்லாம் ஓடிமறையும்

-யசோ-

தெய்வ யானை வள்ளியோடு
தோகை மயிலில் ஏறி வருவான்
ஐயா அந்தக் காட்சி காண
ஆறு கோடிக் கண்கள் போதா!

- மூலபாரதி-

நல்லூரின் நற்தலைவா நல்லருள் புரிய வா வா
கல்லூரி மாணவரெல்லாம் கரங்கூப்பிச் சிரந் தாழ்த்தி
எல்லோரும் ஒருமனதாய் உன்நாமம் உச்சரித்திட்டோம்
பல்லோரும் பணிந்தேத்த நீ நல்லூரில் வீற்றிருக்கின்றாய்.

- இராசையா ஸ்ரீதரன்-

# வாகனத்திற்கான சாரதியை நியமிக்குமாறு கோரிக்கை

(கோப்பாய்)

யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் வாகனம் வழங்கப்பட்ட போதிலும் இதுவரை அதற்கான சாரதி ஒருவர் நியமிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நிலையத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நிலைய அதிகாரிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர். இதனால் சில செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலையும் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து இந் நிலையத்திற்கு நிரந்தர சாரதி ஒருவரை நியமிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (08)

# இளைஞர் தொழிற்பயிற்சி நிலையம் ஜெயபுரத்தில் திறந்து வைப்பு



(யாழ்.நிருபர்)

ஜெயபுரத்தில் 66 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இளைஞர் பயிற்சி நிலையத்தை இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டயஸ் அழகப் பெருமா நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இத் திறப்புவிழா நிகழ்வில் பிரதி அமைச்சர் துமிந்த திசநாயக்கா, இலங்கைக்கான நோர்வே பதில் உயர் ஸ்த்தானிகர் ஒட்டோ ஜொன் புறூட் ஹேட்,கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் திருமதி இங்கிரீட் கஙட்சன், தொழில பயிற்சி நிறுவன வட பிராந்திய உதவிப் பணிப்பாளர் ரி.வினோதவராஜ்,பூநகரி பிரதேசசெயலர் கே.எஸ். வசந்தகுமார் 651 பிரிகேட் தளபதி கேணல் சி.எம்.டீ.பீ சந்திரசேகர ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விழா அரங்கில் அமைச்சர் பிரதி அமைச்சர்,ஏனைய விருந்தினர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

அமைச்சர் தமதுரையில் கனடா,நோர்வே அரசின் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட இத் தொழிற் பயிற்சி நிலையம் மிகக் குறுகிய காலத்தில் வேலைகள் முடித்து வைக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்படுவதுடன் இதை நல்லமுறையில் பயனபடுத்தி பயன் அடைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். (112)

# பின்தங்கிய பிரதேச மாணவர்களுக்கு உதவி வழங்க முன்வரவேண்டும்

## - துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர்-

(அம்பலப்பெருமாள்)

பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள மாணவர்களுக்கு உதவிகளை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் அந்த மாணவர்களும் முயற்சியுடன் கல்வி கற்று எதிர்காலத்தில் உயர்ந்த நிலையை அடைவார்கள் என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்துள்ளார்.

612 ஆவது படையணியின் ஏற்பாட்டில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மாந்தை கிழக்கு கல்விக் கோட்டப்பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், சீருடைத் துணி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

துணுக்காய் வலய பாடசாலை மாணவர்கள் மிகவும் பின்தங்கிய கிராமங்களிலேயே கூடுதலாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு கல்வி கற்ற வேண்டும் என்ற ஆர்வம் அதிகளவில் காணப்பட்டாலும், உதவிகள் இல்லாமல் பாதிக்கப்படுகின்றனர். கற்றல் உபகரணங்கள் சீருடை,பாதணி போன்றன இல்லாமல் அவர்கள் பின்னடைவான நிலையிலே கல்வி கற்று வருகின்றனர்.

இத்தகைய மாணவர்களுக்கு உதவிகள் கிடைக்க வேண்டும் என்று நாம் தொடர்ச்சியாக எல்லோரிடமும் வேண்டி வருகின்றோம்.

இந்நிலையில் மாணவர்களுக்கு சைக்கிள், சீருடைத் துணி,கற்றல் உபகரணங்கள் வேண்டும் என்ற உண்மை நிலையை அறிந்த இராணுவத்தினர் அவர்களுக்கு உதவிகள் வழங்கியுள்ளது பெரும் மகிழ்ச்சியாக உள்ளது.

உதவி வழங்கக்கூடியவர்கள் தொடர்ச்சியாக இம் மாணவர்களுக்கு உதவ முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (121)

# காரைநகர் அபிவிருத்திச்சபை பல்கலை மாணவர்களுக்கு நிதி உதவி

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவுமுகமாக துணைவேந்தர் நிதியத்துக்கு காரைநகர் மக்கள் சார்பில் காரைநகர் அபிவருத்திச் சபையினர் ஒரு இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காரை கிட்ஸ்பார்க் ஆங்கிலமொழி மூல சிறுவர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதமவிருந்தினராக வருகை தந்த யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்திடம் இந்நிதி கையளிக்கப்பட்டது.

காரைநகர் அபிவிருத்திச் சபையின் தலைவர் மகாராணி க.சோமசேகரம் செயலாளர் இ.ஜெயராஜ்,கல்விக்காருண்யன், ஈ.எஸ்.பி.நாகரட்ணம் மற்றும் காரை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் ஆகியோர் ஒரு இலட்சம் ரூபா காசோலையையும் துணைவேந்தரிடம் கையளித்தனர் (10)

# காரைநகர் வைத்தியசாலையில் வெளிநோயாளர் தொகை அதிகரிப்பு

(யாழ.நிருபர்)

காரைநகர் அரசினர் வைத்தியசாலைக்கு வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த சில மாதங்களாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

தினமும் 150 முதல் இருநூறுபேர் வரை சிகிச்சை பெற வருவதால் வெளிநோயாளர் பிரிவில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தினமும் ஐம்பது நோயாளர்களுக்கு மருந்து வகைகள் விநியோகிக்கப்படுகின்றது இவற்றைச் சமாளித்து எல்லா நோயாளர்களுக்கும் வழங்கவேண்டியுள்ளதால் தட்டுப்பாடான சில மருந்து வகைகளை வெளியில் வாங்கும்படி அறிவுறுத்த வேண்டியுள்ளது இதனால் நோயாளர்களின் விசனத்துக்கு ஆளாக வேண்டியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் வைத்தியசாலைக்கும் போதியளவு மருந்து வகைகள் அனுப்புவதற்கும் வெளிநோயாளர் பிரிவின் கட்டட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் சுகாதாரத் திணைக்களம முன்வரவேண்டுமென இங்கு சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.(10)

# யாழ்நகரில் வாகன நெரிசல்

(யாழ்.நிருபர்)

கடந்த சில நாட்களாக யாழ்.நகரில் வாகன நெரிசல் அதிகரித்துக் காணப்படுகின்றன. தென்பகுதியில் இருந்து கூடுதலாக வாகனங்கள் வருகை தந்ததால் நாளில் நெரிசல் ஏற்படுவதற்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்திர சந்திக்கும் யாழ்.பிரதம தபாலக சுற்று வட்ட சந்திகும் இடையில் அதிகளவிலான வாகனங்கள் தரித்து நிற்பதால் போக்குவரத்திற்கு பெரும்இடையூறு ஏற்பட்டு காணப்படுகிறது. அதனைவிட முற்றவெளி தனியார் பஸ் தரிப்பிடத்திலும் தனியார் பஸ்களின் எண்ணிக்கை அதிகரித்தால் அங்கு இட நெருக்கடி ஏற்பட்டு காணப்பட்டது. (வி)



இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி.கிழக்குப் பிரிவின் சிறந்த தொண்டர்கள் கௌரவிக்கும் நிகழ்வில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் கோப்பாய் பிரதேசசெயலர் ம.பிரதீபன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மாவட்டக் கிளையின் உபதலைவர் டாக்டர் லயன் வை.தியாகராசா ஆகியோருடன் சிறந்த தொண்டர்களுக்கான விருது பெற்றவர்கள் காணப்படுகின்றனர். (08)

# இயக்கச்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் நீண்ட கால இடர் நிலைக்கு ஏற்பட்டது தீர்வு

(இயக்கச்சி)

இயக்கச்சி பிரதேச மக்களுக்கு மருத்துவ சேவையினை வழங்குவதில் ஏற்பட்டிருந்த நீண்டகாலப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது இதற்கு துணை புரிந்த ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களின் சேவை பாராட்டக்குரியது என பச்சிலைப்பள்ளி பிரதேச வைத்திய அதிகாரி மைதிலி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இயக்கச்சியில் ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு விழா நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் இயக்கச்சிப் பகுதியில் மருத்துவ சேவையினைப் பெறவரும் மக்கள் நிலையான கட்டட வசதியின்றி நீண்ட காலமாக பெரும் துன்பங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர் இவர்களுக்கு சேவையை வழங்கவரும் மருத்துவர்களும் சீரான சேவையினை வழங்கமுடியாதிருந்தனர் கர்ப்பிணித்தாய்மார்களை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தும் போது நிலத்தில் படுக்கவைத்து பரிசோதிக்கின்ற நிலையே தொடர்ந்தது. இந்நிலையில் இதனை அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் உடனடியாக இச்சுகாதார நிலையத்தினை மறுசீர மைப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டார் அதன் பயனாக இன்று அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய ஆரம்ப சுகாதார நிலையம் அமையப்பெற்று அவரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் அவரின் சேவையினையும் அவர் மக்களின் நலனில் கொண்டுள்ள அதீத அக்கறையும் பாராட்டுக்குரியது என அவர் மேலும் தெரிவித்தார்.



பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் முகுந்தன் தனது உரையின் போது உண்மையான தேசப்பற்றுடையவர்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இக்கட்டடத் தொகுதி அமைந்துள்ளது. அத்தோடு மக்களின் தேவைகளை தேடிச் சென்று இனம்கண்டு உடனடியாகவே அவற்றை நிவர்த்தி செய்து வருபவர் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் என குறிப்பிட்டார்

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 2760 000.00 ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடத்தினை ஈ.பி. டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான சந்திரகுமார் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி கார்த்திகேயன் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன் மற்றும் சுந்தரலிங்கம் ஆகியோரும் கிளிநொச்சி மாவட்ட உதவித்திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன் கிராமசேவையாளர்களான வல்லிபுரம் நிமலகாந்தன் உட்பட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## இளைஞனால் ஏமாற்றப்பட்ட யுவதி மனநிலை பாதிப்புடன் மருத்துவமனையில்

(யாழப்பாணம்)

இளைஞன் ஒருவரால் ஏமாற்றப்பட்ட யுவதி ஒருவர் மன நிலை பாதிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வேலணையைச் சேர்ந்த 19 வயதுடைய குறித்த யுவதி கடந்த சில தினங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்ததாகவும் இது குறித்து அவரது குடும்பத்தினர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்ததாகவும் தெரியவருகின்றது.

தொலைபேசி மூலம் கதைத்து குறித்த பெண்ணைக் காதலித்த இளைஞர் திருமணம் செய்வதாகக் கூறி தன்னை அழைத்துச் சென்றதாகவும் வைத்தியசாலைப் பகுதியில் தன்னை விட்டுவிட்டுச் சென்ற இளைஞர் இதுவரை திரும்பிவரவில்லை எனவும் பாதிக்கப்பட்ட பெண் கூறுவதாக அவரது தாயார் தெரிவித்துள்ளார்.

அந்த இளைஞன் வசிக்கும் இடம் மற்றும் அவரது எதுவித தகவலும் தெரியாத நிலையில் தனக்கு ஏற்பட்ட சம்பவம் குறித்து பெரிதும் மனநிலை பாதிக்கப்பட்டு அப்பெண் இருப்பதாகத் தாயார் மேலும் தெரிவிக்கின்றார். இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (எஸ்)

## கோண்டாவில் வாசிக்கு 10 இலட்சம் ரூபா அதிஷ்டம்

(கோண்டாவில்)

கொவிசெதய அபிவிருத்தி லொத்தர் மூலம் கோண்டாவில் வாசி ஒருவருக்கு ரூபா பத்து இலட்சம் பரிசு கிடைத்துள்ளது.

கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள எஸ். துரைராசாவின் அபிவிருத்தி லொத்தர் முகவரிடம் பெற்றுக்கொண்ட 816 ஆவது கொவிசெதய அபிவிருத்திச் சீட்டிற்கே இப்பரிசுத் தொகை கிடைக்கப்பெற்றுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களினால் அதிஷ்டசாலியின் பெயர் விபரங்களை வெளிவிட முடியாதுள்ளதாக அபிவிருத்தி லொத்தர் முகவரான எஸ். துரைராசா தெரிவித்துள்ளார். (06)

## புனரமைக்கப்பட்ட புதுமுறிப்பு பாலமூடாக போக்குவரத்து

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி மாவட்டத்தின் புனரமைக்கப்பட்ட புதுமுறிப்புப் பாலம் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து விடப்பட்டுள்ளது.

முன்னர் இப்பாலம் உடைவடைந்த நிலையில் போக்குவரத்து நெருக்கடிகளை மக்கள் எதிர்கொண்டுவந்தனர். இதனைக் கருத்திற்கொண்டு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இப்பாலத்தைப் புனரமைப்பதற்காக அடிக்கல் நாட்டி வைத்தார்.

இதன்பின்னர் இப்பாலம் புதிதாகக் கட்டப்பட்டு மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது. தற்போது இப்பாலத்தினூடான போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளதால் தாம் சிரமமின்றி போக்குவரத்தை மேற்கொள்ள முடிவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (121)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(16.08.2011 - செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆடி 31 ஆம் நாள்.

இராகுகாலம்3.05-4.35, சுபநேரம் 10.35 -12.05,

நட்சத்திரம்: பூரட்டாதி பி.இ 12.49 வரை

திதி: திருதியை பி.இ 4.39 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:- பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, மன மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், திடீர் அதிர்ஷ்டம்.

ரிஷபம:- உடல் நலக்குறைவு, பணக்கஷ்டம்தொழிலில் நஷ்டம், குடும்பத்தில் சலனம், திடீரப்பயணம்.

மிதுனம் :- பண வரவு, குடும்பத்தில் மகிழச்சி, மனச் சந்தோஷம், நண்பர் வருகை, சுவீப் அதிர்ஷ்டம்.

கடகம்:- குடும்பத்தில் கவலை, பணகஷ்டம், தொழிலில் நஷ்டம், மனசஞ்சலம், அதிகாரப்போட்டி.

சிம்மம்:- பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், மனச் சஞ்சலம், தேக ஆரோக்கியம், முதியோர் ஆசி.

கன்னி :- குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், மனசஞ்சலம், அதிகாரப் போட்டி, தெரு விபத்து.

துலாம் :- பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, மன விரக்தி, நண்பர் தொல்லை, தேக ஆரோக்கியம்.

விருச்சிகம்:- குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தொழில் லாபம், மூத்தோர் ஆசி, உடல் நல விருத்தி.

தனுசு:- பணக் கஷ்டம், திடீர், பயணம், தொழில் நஷ்டம், குடும்பத்தில் குழப்பம், மன விரக்தி.

மகரம:- குடும்பத்தில் சலனம் பணக் கஷ்டம், உடல் நலக்குறைவு, தொழிலில் நஷ்டம், மனச்சஞ்சலம்.

கும்பம் :- பணவரவு, குடும்பத்தில் நிம்மதி, நண்பர் வருகை, உடல் நலம் பாதிப்பு விபத்து.

மீனம் :- அதிகாரப் போட்டி, பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, மனச் சஞ்சலம், கடன் தொல்லை.

## விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே இருமொழி மூலமும் நடத்தப்பட்ட வலயமட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள் வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

தமிழ் மொழிமூலம்

தரம் - 06

எஸ்.கோகுலன் ஹாட்லிக்கல்லூரி, கே. ஆர்த்தனா நெல்லியடி மத்திய மகா வித்தி, வி. நவநீதன் ஹாட்லிக் கல்லூரி.

தரம் - 07

எஸ். சிவதர்சன் ஹாட்லிக் கல்லூரி, எஸ். சாமினி மொதடிஸ்த பெண்கள் கல்லூரி, எஸ். கஜலக்ஷன் விக்னேஸ்வராக் கல்லூரி.

தரம் - 08

பி. கனிமருதன் ஹாட்லிக்கல்லூரி, சி. அபிஷேகா நெல்லியடி மத்திய மகா வித்தி, எஸ். சிந்துஜா மொதடிஸ்த பெண்கள் கல்லூரி.

தரம் - 09

வி. அஜிந்தன் ஹாட்லிக் கல்லூரி, எஸ். சிவகரன் ஹாட்லிக்கல்லூரி, பி. வினித்குமார் நெல்லியடி மத்திய மகா வித்தி.

தரம் - 10

கே. பூங்குன்றன் நெல்லியடி மத்திய மகாவித்தி, வி.சோதிகா நெல்லியடி மத்திய மகாவித்தி, பி. மயூரிகா மொதடிஸ்த பெண்கள் கல்லூரி.

தரம் - 11

பி. கபிலன் ஹாட்லிக்கல்லூரி, எஸ். சக்தி விக்னேஸ்வராக் கல்லூரி, கே. மாதுர்சன். விக்னேஸ்வராக் கல்லூரி.

ஆங்கில மொழி மூலம்.

தரம் - 06

என். ரமணன் ஹாட்லிக் கல்லூரி, எஸ். விதுர்சன் ஹாட்லிக் கல்லூரி, ரி. கார்த்தீபன் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லாரி.

தரம் - 07

பி.தயாபரன் ஹாட்லிக்கல்லூரி, ஏ.விதுர்சன் ஹாட்லிக்கல்லூரி, கே. நிரூசா மெதடிஸ்த பெண்கள் கல்லூரி.

தரம் - 08

கே. துஷ்யந்தி மெதடிஸ்பெண்கள் கல்லூரி, எம். சங்கீர்தனா வட இந்து மகளிர் கல்லூரி, ரி. தயாரூபன் ஹாட்லி கல்லூரி.

தரம் - 09


ஆர். திருவரன் ஹாட்லிக் கல்லூரி, எம். துளசிகன் நெல்லியடி மத்திய மகா வித்தி, எஸ். கஜன் ஹாட்லிக் கல்லூரி,

தரம் - 10

எஸ். பௌவுனா மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, ஜெ.கபில்நாத் ஹாட்லிக் கல்லூரி, ரி.துவாரகா நெல்லியடி மத்திய மகாவித்தி

தரம் - 11

கே. மாதங்கி நெல்லியடி மத்திய மகாவித்தி, ஆர். அபர்னன் விக்னேஸ்வராக் கல்லூரி, ரி.கோகுலன் ஹாட்லிக் கல்லூரி. (109)




அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் நாடகப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற விபுலானந்த கல்லூரி மாணவர்களின் அன்புக் கரங்கள் என்னும் நாடகத்தை நெறியாள்கை செய்த ஆசிரியர் கந்தையா ஸ்ரீ கந்தவேளிற்கு கல்லூரி சமூகத்தினர் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைக் காணலாம்.



திருமறைக் கலா மன்றத்தின் ஏற்பாட்டில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற நாடகப்பட்டறை ஆரம்ப நிகழ்வில் கலாசார உத்தியோகத்தர் இ. கந்தவேள் உரையாற்றுவதையும் அருகில் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (105)

# விளையாட்டில் சாதிக்க வேண்டுமெனில் வெற்றிபெறும் மனநிலை இருக்கவேண்டும்

## கூறுகிறார் தேசிய கூடைப்பந்தாட்ட அணி வீரர் வாகீசன்



(யாழ்ப்பாணம்)

விளையாட்டையும் ஒரு துறையாகக் கருதி, அதில் முழு மனதுடன் வெற்றிபெறவேண்டும் எனப் போராடினால் நிச்சயம் சாதிக்க முடியும் என்று அண்மையில் தேசிய கூடைப்பந்தாட்ட அணியில் இடம்பிடித்த யாழ். வீரர் வகீசன் தெரிவித்தார்.

புதுடில்லியில் அண்மையில் நிறைவடைந்த ஆசிய நாடுகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் போட்டியிட்ட இலங்கை அணியில் இவர் பங்குபற்றியிருந்தார்.

தேசிய அணியில் இடம்பிடித்தது குறித்து எமது செய்தியாளர் இவரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: ஈட்டி எறிதல், குண்டு போடுதல் போன்ற போட்டிகளிலேயே நான் அதிக ஆர்வம் செலுத்தி வந்தேன். இதில் தேசிய மட்டப் போட்டிகளில் பல இடங்கள் எனக்குக் கிடைத்தது. ஆனால், இப்போட்டிகளில் சர்வதேச மட்டத்தில் இடங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமா? என்ற கேள்வி எனக்கு ஏழுந்தது. ஏனெனில், என் உடல் அமைப்பு இப்போட்டிகளுக்குப் பொருந்தாது என நான் உணர்ந்தேன்.

இதன் காரணமாக கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் எனது ஆர்வத்தைச் செலுத்தினேன்.

கூடைப்பந்தாட்டத்தில் எனக்கிருந்த ஆர்வமும், என் உடல் அமைப்பும், உயரமும் சர்வதேச மட்டத்தில் பெரும் பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்குள் எழுந்தது.

இதன் காரணமாக என் முயற்சியை முழுமையாக கூடைப்பந்தாட்டத்தில் ஈடுபடுத்திக் கொண்டேன். அதில் தீவிர பயிற்சி, நுணுக்கங்கள் என்பனவற்றை ஒவ்வொரு போட்டிகள் ஊடாக பெற்றுக் கொண்டேன். அதில் மிளிர்ந்த நான் பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் என அறியப்படும் ஒருவராகவிருந்தேன். பின்னர் மாகாணம், தேசிய மட்டப் போட்டிகளிலும் எனது திறமைகளை வெளிப்படுத்தினேன்.

அதன் வெளிப்பாடாக தற்போது இலங்கை அணியில் இடம்பிடிக்கும் வாய்ப்பையும் பெற்றுக் கொண்டேன்.

தற்போது நான் தேசிய அணியிலும், இலங்கை விமானப் படை கூடைப்பந்தாட்ட அணியிலும் இருந்தாலும் கல்வியிலும் சிறந்த இடத்தில் இருக்க வேண்டும் என நினைக்கின்றேன். ஏனெனில், விளையாட்டில் சிறப்பாகச் செயற்படுவோர் கல்வியில் சாதிப்பதில்லை என்றதொரு கருத்து பொதுவாக முன்வைக்கப்படுகின்றது. எனவே, இந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். சில கல்வித் துறைகளில் தற்போது நான் பயின்று வருகின்றேன். அதில் சாதிக்க முடியும் என்பதை விரைவில் வெளிப்படுத்துவேன் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது.

என் வளர்ச்சிக்கு துணை புரிந்த ஆசிரியர் சிவதாஸ், பயிற்றுநர் றமணன், சண் தயாளன், எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் எமது பாடசாலையான யாழ். இந்துக் கல்லூரி சமூகம் எனப் பலர் காரணமாக இருந்துள்ளனர். அவர்களுக்கு இந்த இடத்தில் நன்றிகூற கடமைப் பட்டுள்ளேன் என்றார். (30)

## விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய போட்டி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிக்கும், யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான சிநேகபூர்வமான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் பயிற்சிப் போட்டி ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

இரு பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இன்று நடைபெற்ற இப்போட்டி சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரியின் 'ஏ' அணியே போட்டியில் பங்குபற்றுகின்றது எனவும், இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்ட பிரிவு மூன்றின் முதல் சுற்று ஆட்டத்தில் நல்ல ஆட்டத்திறனை வெளிப்படுத்தியிருப்பதால் இப்போட்டி வெல்லக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியும் அண்மையில் நல்ல பெறுபேற்றைக் கொண்டிருப்பதால் விறுவிறுப்பு நிறைந்த போட்டியாக இருக்கும் என நம்பப்படுகின்றது.

# கிளிநொச்சி தேசிய இளைஞர் மன்ற விளையாட்டுப் போட்டிகள் இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தேசிய தின விளையாட்டுப் போட்டி இன்று கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மாவட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான இவ்விளையாட்டுப் போட்டியில் கரைச்சி, பூநகரி, பளை (பச்சிலைப் பள்ளி), கண்டாவளைப் பிரதேசங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் போட்டி நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவை மன்ற அதிகாரி ஜெயவீரதென்னகோன் தலைமையில் நடைபெறவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

சுவட்டு நிகழ்வு, குழுநிலைப் போட்டி மற்றும் கிரிக்கெட், கால்பந்துப் போட்டிகள் என்பனவும் இடம்பெறும் என்றும் வெற்றியீட்டுவோருக்கான பரிசில்கள் இன்றைய தினமே வழங்கப்படும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள வீர, வீராங்கனைகளை குறித்த நேரத்திற்கு சமூகம் தந்து ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எஸ்)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மெய்வல்லுநர் போட்டி செப்ரெம்பரில்

(யாழ்ப்பாணம்)


இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் இளைஞர்களுக்கிடையிலான மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டி அடுத்த மாதம் 16, 17, 18ஆம் திகதிகளில் கண்டி போகம்பறை மைதானத்தில் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றும் இவ்விளையாட்டுப் போட்டியினை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்புப் பணிமனை ஒழுங்கு செய்துள்ளது.

இதற்கென யாழ். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் 27 பேர் கொண்ட இளைஞர் அணியினர் கண்டிக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளதாகவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். பிரிவு இளைஞர், யுவதிகள் இவ்விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றவுள்ளனர் என்றும், அவர்களுக்கான பயண ஒழுங்குகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். பணிமனையினர் மேற்கொண்டுள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

# முகமது யூசுப் ஓய்வு?



(கராச்சி)

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் முகமது யூசுப் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற முடிவு செய்துள்ளது தெரியவந்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையுடனான ஒப்பந்தத்தில் இருந்து நீக்கப்பட்டதாலேயே அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறியது: பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சமீபத்தில் வெளியிட்ட வீரர்கள் ஒப்பந்தப் பட்டியலில் முகமது யூசுபின் பெயர் இடம்பெறவில்லை. நீண்ட நாட்கள் பாகிஸ்தான் அணிக்காக சிறப்பாக விளையாடி வந்த அவரின் பெயர் இடம்பெறாததால் மிகுந்த அதிருப்தியடைந்தார். பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் இதுபோன்ற செயல்கள் காரணமாகவே அவர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறுவது என்ற முடிவை எடுத்துள்ளார்.

மேலும் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியமோ அல்லது தேர்வுக்குழு உறுப்பினர்களோ, யூசுபின் எதிர்காலத் திட்டம் குறித்தோ, உடற்தகுதி குறித்தோ அவரிடம் எதுவும் பேசாதது அவருக்கு மிகப் பெரிய ஏமாற்றத்தை அளித்தது. பாகிஸ்தான் அணிக்கு மூத்த வீரர்கள் தேவையில்லை என்று கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துவிட்டது.

எனவே இருபது ஓவர், ஒருநாள் டெஸ்ட் என அனைத்துப் போட்டிகளில் இருந்தும் ஓய்வுபெறுவதே சரியானது என யூசுப் கருதுகிறார் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# ருவென்ரி 20 காலிறுதிக்கு பற்றீசியன் தகுதி

(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தும் பி.எஸ். குமாரசுவாமி வெற்றிக் கிண்ணத்திற்கான ருவென்ரி 20 தொடரின் காலிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியை பற்றீசியன் அணி பெற்றுள்ளது.


ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தால் இரண்டாவது ஆண்டாக நடாத்தப்படும் இச்சுற்றுப் போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் அரியாலை சென்றல் அணியும், பற்றீசியன் அணியும் மோதின. இதில் முதலில் ஆடிய சென்றல் அணி 14.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வதூசன் 39, நீதன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுஜீவன் ஹட்ரிக் உட்பட நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் முரளி, எரிக் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கிய ஆடிய பற்றீசியன் அணி 8.3 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கிளிங்ரன் 20, ரியூடர் 59 ஓட்டங்களைப் பெற்றனர்.

இச்சுற்றுப் போட்டியில் யாழ். துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அணிகள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் இப்போட்டித் தொடர் நடைபெற்று வருகின்றது. இப்போட்டித் தொடரில் ஏராளா மான கிரிக்கெட் ரசிகர்கள் பார்வையிட்டு வருகின்றனர் எனவும் போட்டி ஏற்பட்டார்கள் தெரிவித்தனர்.



நவாலி நல்லாலன் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் றொபின்சன் பரிசில் வழங்கு வதைக் காணலாம். (04)

# 20 வயது உலகக் கிண்ண கால்பந்தாட்டம் அரையிறுதிக்கு முன்னணி அணிகள் தகுதி

(கார்டகெனா)

உலகக் கோப்பை 20 வயதிற்குட்பட்டோருக்கான கால்பந்துத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு முன்னணி அணிகளான போர்த்துக்கல், மெக்சிகோ, பிரேசில் பிரான்ஸ் ஆகிய அணிகள் தகுதி பெற்றுள்ளன.

கொலம்பியாவில், சர்வதேச கால் பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்டு வரும் 20 வயதுக்குட்பட்டோருக்கான கால் பந்துத் தொடர் நடைபெற்று வருகின்றது.

இதன் முதலாவது காலிறுதிப் போட்டியில் போர்த்துக்கல், அர்ஜென்டினா அணிகள் மோதின.

விறுவிறுப்பான இப்போட்டி, ஆட்ட நேர முடிவில் கோல் எதுவுமின்றி சம நிலை வகித்தது. பின், இரு அணிக்கும் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதிலும் இரு அணி வீரர்களால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.



இதனால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய போர்த்துக்கல் அணி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறியது.


மற்றொரு காலிறுதியில், மெக்சிகோ-கொலம்பியா அணிகள் மோதின. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மெக்சிகோ அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

இதேவேளை, மூன்றாவது காலிறுதி ஆட்டம் ஒன்றில் பிரான்ஸ் அணி கூடுதல் நேரத்தில் 3-2 என்ற கோல் கணக்கில் நைஜீரியா அணியை வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

நான்காவது காலிறுதிப் போட்டியில் பிரேசில், ஸ்பெயின் அணிகள் மோதின. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பிரேசில் அணி பெனால்டி சூட்டில் 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

## 28 ஆண்டுகளுக்குப் பின்

# பதக்கம் வென்றது இந்திய ஜோடி



(லண்டன்)

இங்கிலாந்தில் நடந்த உலக பட்மின்ரன் போட்டியில் 28 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக இந்திய ஜோடி பதக்கம் வென்றுள்ளது.

19ஆவது உலக பட்மின்ரன் சம்பியன்ஷிப் போட்டி இங்கிலாந்தின் வெம்ப்லே அரங்கில் கடந்த ஒரு வார காலமாக நடந்தது.

பெண்கள் இரட்டையரில் இந்தியாவின் ஜுவாலா கட்டா-அஸ்வினி ஜோடி சீனாவின் டியான் குயிங்-ஷாவோ யுன்லெயை எதிர்கொண்டனர். 38 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் ஜுவாலா-அஸ்வினி ஜோடி 14-21, 16-21 என்ற நேர் செட்டில் தோல்வி அடைந்தது.

இருப்பினும் அரையிறுதிக்கு முன்னேறியதன் மூலம் ஜுவாலா-அஸ்வினி ஜோடிக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்திருக்கிறது.

உலக பட்மின்ரன் சம்பியன்ஷிப் வரலாற்றில் கடந்த 28 ஆண்டுகளாக இந்தியாவுக்கு எந்த பதக்கமும் கிடைக்காமல் இருந்தது. இந்த நீண்ட கால தாகத்தை ஜுவாலா-அஸ்வின் கூட்டணி தற்போது தணித்திருக்கிறது. இதற்கு முன்பு உலக பட்மின்ரனில் இந்தியா ஒரே ஒரு பதக்கம் மட்டுமே பெற்றிருந்தது. 1983ஆம் ஆண்டு டென்மார்க்கில் நடந்த போட்டியில் ஆண்கள் ஒற்றையரில் இந்தியாவின் பிரகாஷ் படுகோன் வெண்கலம் வென்றிருந்தார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் சீனாவின் லின் டான் 20-22, 21-14, 23-21 என்ற செட் கணக்கில் மலேசியாவின் லீ சோங் வெயை தோற்கடித்து தொடர்ந்து 4ஆவது முறையாக சம்பியனானார்.

# பங்களாதேஷுடனான 2ஆவது போட்டி ஏழு விக்கெட்டால் வென்றது சிம்பாப்வே

(ஹாராரே)

பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் ஏழு விக்கெட்டுக்களால் சிம்பாப்வே அணி இலகுவான வெற்றிபெற்றது. இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது ஒரு நாள் போட்டி ஹராரேவில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி பிரையன் விடோரியின் பந்து வீச்சுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் 47.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 188 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதில் அதிகபட்சமாக அறிமுக வீரர் நசீர் ஹுசைன் 63, அப்துர் ரசாக் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இளம் இடக்கை வேகப்பந்து வீச்சாளர் பிரையன் விடோரி 20 ஓட்டங்களைக் கொடுத்து விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இது அவருக்கு 2ஆவது ஒரு நாள் போட்டியாகும். முன்னதாக தனது அறிமுகப் போட்டியிலும் அவர் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தனது முதல் இரு போட்டிகளிலும் தொடர்ந்து இரண்டு முறை 5 விக்கெட்டுகள் கைப்பற்றிய முதல் வீரர் என்ற சாதனையை விடோரி படைத்தார.

பதிலுக்கு ஆடிய சிம்பாப்வே அணி 44.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சிபான்டா 67, மசகட்சா 38, தைபு ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களையும் பெற்றனர். இந்த வெற்றியின் மூலம் 5 போட்டி கொண்ட ஒரு நாள் தொடரில் சிம்பாப்வே அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

# ஒன்பது வருடங்களுக்குப் பின் ஷார்ஜாவில் கிரிக்கெட் போட்டி

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் கடைசி டெஸ்ட் போட்டியை ஷார்ஜா அரங்கில் நடத்த திட்டமிட்டுள்ளது. இதன்படி 9 ஆண்டுகளுக்கு பின் ஷார்ஜாவில் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் முதல் டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ளது. இந்நிலையில் ஷார்ஜா அரங்கில் மீண்டும் சர்வதேச போட்டி நடைபெறுவதையிட்டு எமிரேட் கிரிக்கெட் சங்கத் தலைவர் டிலவார் மானி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

ஷார்ஜாவில் பாகிஸ்தான் அணி டெஸ்ட் போட்டியில் விளையாடுவது உறுதியாகியுள்ளது. ஆரம்பத்திலேயே ஷார்ஜாவில் போட்டியை நடத்துவது குறித்து நாம் பரிந்துரைத்தோம். எனினும் அது குறித்து இறுதி முடிவு எடுக்க கால தாமதம் ஏற்பட்டது. ஆனால் தற்போது அங்கு போட்டி நடைபெறுவது உறுதியாகியுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம் என்று டிலவார்மானி தெரிவித்தார்.


இதன்படி வரும் நவம்பர் 3 ஆம் திகதி ஷார்ஜாவில் டெஸ்ட் போட்டி நடைபெறும் என எமிரேட் கிரிக்கெட் சங்கம் தெரிவித்துள்ளது. இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டு டெஸ்ட் போட்டிகளும் முறையே அபுதாபி ஷெய்க் செய்த் அரங்கிலும், டுபாய் சர்வதேச மைதானத்திலும் நடத்த அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் டுபாய் சர்வதேச மைதானத்தில் கன்னி டெஸ்ட் போட்டி கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# முதல் நிலை மட்டுமல்ல உலகக் கிண்ணமும் கைப்பற்ற வேண்டுமென்பதே எமது இலக்கு

(லண்டன்)

முதல் நிலை இடத்தைத் தக்க வைத்துக்கொள்வது மட்டுமல்ல, அடுத்து வரும் உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதுவும் எமது இலக்காக உள்ளதென இங்கிலாந்து அணியின் பயிற்றுநர் அன்டி பிளவர் தெரிவித்தார்.

முதல் நிலை இடத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள முயற்சிப்பது மட்டும் எங்களது இலக்கல்ல. நாங்கள் இதுவரை 50 ஓவர் உலகக் கிண்ணத்தை வென்றதில்லை.



எதிர்வரும் 2015ஆம் ஆண்டு உலக கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பது எங்களது இலக்கு. அதற்கான திட்டமிடலை ஏற்கனவே தொடங்கி விட்டோம்.

இதில் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ளக் கூடிய சாத்தியங்கள் எமது அணிக்கு இருப்பதாகவே நான் உணர்கின்றேன். ஏனெனில், போட்டித் தொடர் நடைபெறவுள்ள நாடுகளான அவுஸ்ரேலியா, நியூசிலாந்தில் வேகப் பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களே அதிகம் உள்ளன. அவ்வாறு அமைந்தமை எமது அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ள நல்ல வாய்ப்பாகவே நான் உணர்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# இலங்கை - உலக லெவன் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி


(கொழும்பு)

அடுத்த வருடம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடாளுமன்ற ஒன்றியத்தின் மாநாட்டை முன்னிட்டு இலங்கை மற்றும் உலக 11 அணிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டியொன்றை நடாத்த இலங்கை நாடாளுமன்றம் தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஏற்கனவே சபாநாயகர் சமல் ராஜபக்ஷ விளையாட்டு துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயுடன் பேச்சு நடத்தியுள்ளதாகவும், இதற்கிணங்க கிரிக்கெட் போட்டியினை இலங்கை நாடாளுமன்றமும் இலங்கை கிரிக்கெட் சபையும் இணைந்து நடாத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுநலவாய நாடாளுமன்ற மாநாட்டினை முன்னிட்டு 50இற்கு மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# டெஸ்டில் இங்கிலாந்து அணியை எவராலும் அசைக்க முடியாது



(சிட்னி)


டெஸ்ட் கிரிக்கெட்டில் யாராலுமே வீழ்த்திவிட முடியாத அணியாக இங்கிலாந்து அணி திகழும் என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்தார்.

புதிய முதல் நிலை அணியான இங்கிலாந்து அணி டெஸ்ட் போட்டிகளில் காட்சி தருகின்றது. அந்த அணியில் உள்ள வீரர்களைப் பார்க்கும்போது அடுத்த சில ஆண்டுகளுக்கு உலகக் கிரிக்கெட்டில் அசைக்க முடியாத அணியாக விளங்குகின்றது.

தற்போதுள்ள டெஸ்ட் அணிகளில் இங்கிலாந்து அணி போன்று பொறுமையாக விளையாடக்கூடிய அணி இல்லை என்றே நான் கருதுகின்றேன். ஏனெனில், ருவென்ரி 20, ஒரு நாள் போட்டிகளில் ஆடியது போன்றே பெரும்பாலான அணிகள் விளையர்டுகின்றன. இங்கிலாந்து அணியோ டெஸ்ட் போட்டியில் எப்படி ஆட வேண்டும் என்பதை வெளிப்படுத்துகின்றது. ஏனைய அணிகள் இங்கிலாந்தைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தர்.

# நீண்ட காலம் ஆதிக்கம்

(லண்டன்)



இங்கிலாந்து அணி வீரர்களின் பலம், உடற்தகுதி, உறுதி, வெற்றிபெற வேண்டும் என்ற வேட்கை ஆகியவற்றைப் பார்க்கும் போது டெஸ்ட் கிரிக்கெட்டில் நீண்ட காலம் ஆதிக்கம் செலுத்தும் என நான் நம்பு கின்றேன் என்று முன்னாள் இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோகன் தெரிவித்தார்.

அணியாகவோ அல்லது தனிப்பட்ட வீரர்களை பொறுத்த அளவிலோ அவுஸ்ரேலியாவை விட இங்கிலாந்து சிறப்பாக இருக்கிறது.

இங்கிலாந்து வீரர்கள் அனைவரும் நல்ல ஆட்டத் திறனுடன் உள்ளனர். அணியின் பலம், உடல்தகுதி, உறுதி, வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை ஆகியவற்றை வைத்துப் பார்க்கும் போது இங்கிலாந்து அணி நீண்ட காலம் கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்தும் என்று நம்புகிறேன்.

11 வீரர்கள் மட்டுமல்ல, 24-25 வீரர்கள் நிறையத் திறமையுடன் இங்கிலாந்து அணியில் இடம் பெறக்கூடிய தகுதியுடன் இருக்கிறார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அலட்சியமே காரணம்

**இங்கிலாந்து தொடரில் இந்திய அணியின் தொடர் தோல்விக்கு அலட்சியப்போக்கே காரணம் என்று முன்னாள் வீரர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.**

**முன்னாள் வீரர்களான வெங் சர்க்கார், அனில் கும்ளே, தெரிவுக் குழுத் தலைவர் ஸ்ரீகாந்த், மதன் லால், கங்குலி போன்றோர் குற்றம் சாட்டியுள்ளனர். இதில், இந்தியா மட்டுமல்ல அனைத்து அணிகளும் ஆண்டின் 365 நாட்களும் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருப்பதாகவும், 35 அல்லது 38 வயதுடைய வீரர்களைக காலகாலமாக வைத்து கொணடிருக்க முடியாது எனவும், இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் கடந்த சில தொடர்களில் வெற்றிகளை குவித்ததால் அதன் மூலம் அதீத நம்பிக்கையில் இந்திய அணி கொஞ்சம் அலட்சியமாக இருந்து விட்டது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

# மர்ம மனிதர்கள் கைதானால் 7 வருட சிறை வழங்கவேண்டும்

## கொழும்பு பல்கலை சட்ட விரிவுரையாளர்

(கொழும்பு)

மக்களை அச்சமூட்டுதல் போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் மர்ம மனிதர்களாக நடந்து கொள்பவர்களுக்கு ஏழு வருட சிறைத் தண்டனை வழங்கப்பட வேண்டுமென, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பிரதிபா மஹனாம தெரிவித்துள்ளார்.

சிறிய திருட்டுகளில் ஈடுபடுவோருக்கு இரண்டு வருட சிறைத் தண்டனையும், கொலைக் குற்றங்களுக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனையும் வழங்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். மர்ம மனிதர் என்ற போர்வையில் பெண்களைத் துன்புறுத்துபவர்களுக்கு குறைந்தபட்சம் இரண்டு வருடங்களாவது சிறைத் தண்டனை வழங்கப்படவேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை மர்ம மனிதர்களாக நடந்து கொள்பவர்கள் மக்களை அச்சத்திற்குள்ளாக்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான பிரிஷாந்த ஜயக்கொடி குறிப்பிட்டுள்ளார். மர்ம மனிதர்கள் தொடர்பில் வெளியாகியுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை எனச் சுட்டிக்காட்டிய அவர், அரசாங்கம் பொலிஸ் திணைக்களம் மற்றும் பாதுகாப்புப் பிரிவினரை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் நோக்கில் இவ்வாறான கட்டுக் கதைகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடடார். இந்த போலியான கதைகளை நம்பி ஏமாற வேண்டாமெனவும் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைக்கு எப்போதுமே ஆதரவளிக்க சீனா தயார்



(கொழும்பு)

அனைத்துலக ரீதியாக கொழும்பு எப்போதெல்லாம் சவாலகளைச் சந்திக்கிறதோ அப்போதெல்லாம் இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதாக சீனா உறுதியளித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.


சீனாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சீன அதிபரும், சீனப் பிரதமரும் இந்த உறுதிமொழியை வழங்கியதாகவும் அவர் கூறியுள்ளார்.

மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளை நேற்று முன்தினம் சந்தித்த போதே வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். முப்பது ஆண்டுகால ஆயுதப்போராட்டத்தை இலங்கை முடிவுக்குக் கொண்டு வந்ததையிட்டு சீனா பெரும் உவகை கொண்டுள்ளதாகவும், நாட்டின் அடிப்படைக் கட்டுமானங்களுக்கு உதவ ஆர்வம் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அத்துடன் உள்நாட்டுப் பிரச்சினைகள் இலங்கைக்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் சீனா இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பதவிப் பேராசைக்கான மோதலை நிறுத்தும் காலம் உருவாகியுள்ளது

## கரு ஜெயசூரிய



(கொழும்பு)

பதவிக்கான பேராசை காரணமாக இடம்பெறுகின்ற மோதல்களை நிறுத்துவதற்கான காலம் உருவாகியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அல்பிட்டிய, நியாகம ஸ்ரீ புண்ணியாராம விகாரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புத்தர் சிலையைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மிகவும் சிறந்த நாடாக மாறுவதற்கான அதிர்ஷ்டகரமான சூழ்நிலை கொண்ட நாடாக தற்போது இலங்கை விளங்குகிறது. இந்நிலையில் இணக்கம் மற்றும் ஒன்றிணைவு என்பன மக்களிடையே அவசியமாகும்.

பதவிக்கான பேராசை மற்றும் பல்வேறு விடயங்கள் காரணமாக மக்கள் மத்தியில் நிலவுகின்ற பிரச்சினைகளை நிறுத்திக் கொண்டால் நாட்டிற்கு சிறந்த எதிர்காலம் கிடைக்கும் என்றார்.

# இலங்கைக்கு எதிராக செயற்பட்டிருந்த மேலைத்தேசம் பலனை அனுபவிக்கிறது

## பசில் ராஜபக்ஷ



(கொழும்பு)

இலங்கைக்கு எதிராகச் சதியில் ஈடுபட்ட மேலைத்தேய நாடுகள் தற்போது அதற்கான பலன்களை அனுபவித்து வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தரணியகல பிரதேசத்தின் வீதியைப் புனரமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது நாட்டிலிருந்து தப்பிச் சென்ற விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களும், வெளி நாடுகளில் இருந்த சில உறுப்பினர்களும் வேறொரு நடவடிக்கையை மேற்கொண்டனர். மேலைத்தேய நாடுகளிலுள்ள சில அரச சார்பற்ற நிறுவனங்களுடன் டொலர்களுக்கு ஆசைப்பட்ட சில நபர்களும் இணைந்து நாட்டிற்கு எதிரான சதியினை முன்னெடுக்கின்றன. அந்த வகையில் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வகையில் தற்போது மர்ம மனிதர்கள் பிரச்சினை உருவாகியுள்ளது என்றார்.

## சடலம் மீட்பு


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி குமாரவெள்ளியார் கிராம களப்புப் பகுதியில் அடையாளங் காணப்படாத நபர் ஒருவரின் சடலம் ஏறாவூர் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் 50 வயதுடைய நபர் ஒருவருடையதாகவும் இவர் இரு நாட்களின் முன் உயிரிழந்திருக்கலாம் எனவும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு ஆதார வைத்தியசாலையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்

# நாட்டில் கிறீஸ் பூதங்கள் எவையும் இல்லை சந்தேகமானோரை பொலிஸில் ஒப்படைக்கவும்

## அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த



(கொழும்பு)

நாட்டில் கிறீஸ் பூதங்களோ மர்ம மனிதர்களோ இல்லை. சில இடங்களில் மனநோயாளிகள் ஏதாவது செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். அவ்வாறு யாராவது சந்தேகத்துக்கு இடமான முறையில் செயற்பட்டால் அவர்களைப் பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்க வேண்டும். மாறாக, பிரதேச மக்கள் சட்டத்தைக் கையில் எடுக்கக் கூடாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம் ஜெயந்த தெரிவித்தார்.

கிறீஸ் பூதங்கள் மற்றும் மர்ம மனிதர்கள் குறித்து தக வல் வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் கூறியதாவது நாட்டில் கிறீஸ் பூதங்களோ மர்ம மனிதர்களோ இல்லை. இவை வெறும் கதைகள் மட்டுமேயாகும்.

தற்போதைய நிலைமையில் கிறீஸ் மனிதர்கள் மற்றும் மர்ம மனிதர்கள் என்ற பெயரில் கொல்லப்பட்டுள்ளவர்கள் அப்பாவி மக்கள் எனத் தெரியவந்துள்ளது.


எனவே இது விடயத்தில் பொலிஸார் நடவடிக்கை எடுப்பர். விஞ்ஞான ரீதியிலும் நவீன தொழில்நுட்பங்களினாலும் உயர்வு பெற்ற இந்த உலகில் கிறீஸ் பூதங்கள் மற்றும் மர்ம மனிதர்கள் நடமாடுவதாகவும் பல அசம்பாவிதங்களில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுவதை ஏற்க முடியாது.

சில இடங்களில் மனநோயாளிகள் இருந்துகொண்டு ஏதாவது அசம்பாவிதங்கள் அல்லது விநோதமான செயற்பாடுகளில் ஈடுபடலாம்.

மனநோயாளிகள் இவ்வாறு செயற்படுகின்றமை புது விடயமல்ல. மேலும் கிறீஸ் பூதங்கள் மற்றும் மர்ம மனிதர்கள் என்ற பெயரில் யாராவது அசம்பாவிதங்களில் ஈடுபட்டால் அவர்களை பிரதேச மக்கள் பொலிஸாரிடம் பிடித்துக் கொடுக்க வேண்டும்.

அதனைவிடுத்து அவ்வாறானவர்களை கொலை செய்து விடுவது சட்டத்தை கையில் எடுக்கும் செயற்பாடாகும். இந்த விடயத்தில் பிரதேச மக்கள் சட்டத்தை கையில் எடுக்க முயற்சிக்கக்கூடாது என்றார்.


# சில நகர சபைத் தேர்தல்களில் தனித்துப்போட்டியிட முடிவு



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சில நகர சபைகளில் தனித்துப் போட்டியிடுவது குறித்து தமது கட்சி கவனம் செலுத்தியுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைவர்கள் வலியுறுத்தியதாகவும், இதுவரை இறுதி முடிவு எட்டப்படவில்லையெனவும், கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்ட பின்னரே இது குறித்து முடிவு எடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாடாளுமன்ற எண்ணிக்கை குறைப்பு அரசியலமைப்புக்கு முரணான செயல்



(கொழும்பு)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்கத் தேர்தல் ஆணையாளர் எடுத்த நடவடிக்கை அரசியலமைப்புக்கு முரணானது என்று முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்துள்ள நிலையில் நாடாளுமன்ற பிரதிநிதிகள் எண்ணிக்கையைக் குறைத்தது அங்குள்ள மக்களின் உரிமைகளைப் பறிக்கின்ற செயல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளவுள்ள நிலையிலேயே இது போன்ற நடவடிக்கையை எடுக்க முடியும் என்று அரசியலமைப்பின் 98(9) பிரிவு கூறுவதாகவும், ஆனால் அடுத்த 5 ஆண்டுகளுக்கு எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளக் கூடிய சூழல் இல்லாத நிலையில் தேர்தல் ஆணையாளர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மோசமான இந்த முடிவை எடுத்துள்ளதன் மூலம் தேர்தல் அதிகாரிகள் பாரிய தவறிழைத்துள்ளதாகவும் கூறியுள்ள சரத் என் சில்வா, இது இனப்பிரச்சினையை மேலும் கொளுந்து விட்டெரியச் செய்யக் கூடும் என்றும் எச்சரித்துள்ளார்.

# மர்மமனிதன் பீதியை அடுத்து ஊர்திரும்பும் பணியாளர்கள்

(யாழ்ப்பாணம்)

மலையகம் மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டிருக்கும் மர்ம மனிதன் அச்சுறுத்தல் காரணமாக வடபகுதியில் தொழில் நிமிர்த்தம் தங்கியிருக்கும் குறித்த பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களை பாதுகாப்பின் நிமிர்த்தம் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் திரும்பி வருமாறு அழைப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஒருவார காலத்தல் மலையகத்திலும் தொடர்ந்து கிழக்கிலும் மர்மமனிதன் பீதியினால் குறித்த பகுதிகளில் பதற்றம் நிலவி வருவதுடன் இதன் காரணமாக பலர் இறந்தும் காயமடைந்து போயுள்ளனர்.

இதன் காரணமாக அப்பகுதிகளில் இரவு நேரங்களில் மக்கள் விழித்திருக்கும் நிலை காணப்படுவதாகவும் இதனை அடுத்து ஆண்கள் துணையில்லாத குடும்பங்களும் ஏனைய குடும்பங்களும் தமது பாதுகாப்பின் நிமிர்த்தம் வடபகுதியில் குறிப்பாக வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும் தொழிலின் நிமிர்த்தம் தங்கியிருக்கும் குறித்த பகுதி இளைஞர்களுக்கும் உறவினர்களால் தகவல் கொடுக்கப்பட்டு தமது பாதுகாப்பிற்கு அழைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதனை அடுத்து வடக்கில் கட்டடத்தொழில்,வியாபாரம், மற்றும் ஏனைய தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்கள் தமது பகுதிகளை நோக்கி புறப்பட்டுச் செல்வதாக மேலும் தெரியவருகின்றனது. (பா)

# மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைப் பெண்ணுக்கு விடுதலை

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த இலங்கை பெண் ஒருவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அப்துல் கரீம் கன்சுல் முஹாரியா என்ற இலங்கைப் பெண்ணே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தொழில் புரிந்த இடத்தில் பெண் ஒருவரை படுகொலை செய்த குற்றத்திற்காக குறித்த பெண்ணுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டின் காரணமாக 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் குறித்த பெண் சவுதி அரேபிய சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக டுபாய் நாட்டிற்கான இலங்கைத் தூதுவர் சரத் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலை செய்யப்பட்ட குறித்த பெண் இலங்கைக்கு கடந்த யூலை 31ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

# அரசின் சில நடவடிக்கைகளில் திருப்தி இல்லை என்கிறார் மல்வத்து பீடாதிபதி

(கொழும்பு)

அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தி அடைய முடியாது என கண்டி மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தேரரை நேற்று முன்தினம சந்தித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், எந்தெந்த நடவடிக்கைகள் தொடர்பில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்பது பற்றிய விபரங்களை அவர் வெளியிடவில்லை.

நாட்டில் நிலவி வரும் முக்கிய பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு வழங்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கு மக்களுக்கு நிரந்தரத் தீர்வுத் திட்டமொன்றை வழங்குவதன் மூலம் மீண்டும் வன்முறைகள் வெடிப்பதனை தடுக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

பௌத்த மத பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதனை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சங்க சம்மேளனத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அமுல்ப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்த வேண்டுமென மாநாயக்க தேரர் அமைச்சர் பீரிஸிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சிமெந்தின் விலையை அதிகரிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

சிமெந்து மூடையொன்றின் விலையை 785 ரூபாவால் அதிகரிக்குமாறு 3 தனியார் நிறுவனங்கள் நுகர்வோர் அதிகாரசபையிடம் வலியுறுத்தியுள்ளன.

இந்தக் போரிக்கைகள் நுகர்வோர் அதிகார சபையின் விலை நிர்ணயக் குழுவிடம் முன்வைக்கப்பட்ட பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென அதிகார சபையின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது ஒரு மூடை சிமெந்து 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

# ஐந்து தாய்லாந்துப் பெண்களை நாடு கடத்தியது இலங்கை

(கொழும்பு)

பாலியல் தொழிலில் ஈடுபட்ட ஐந்து தாய்லாந்துப் பெண்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் குறித்த பெண்கள் நாடு கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பெண்களின் பெயர்களை கறுப்புப் பட்டியலில் இடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிருலப்பனைப் பிரதேசத்தில் தங்கியிருந்த குறித்த பெண்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

மேலும் வெளிநாட்டு பெண்கள் இலங்கையில் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருவதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு தகவல் கிடைத்துள்ளது.

கொழும்பு மற்றும் முக்கிய நகரங்களில் வெளிநாடுகளைச் சேர்ந்த பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

# உயர்தர கணக்கீட்டு வினாத்தாள் பாடத்திட்டத்திற்கு அமையவே தயாரிப்பு

## பரீட்சைகள் ஆணையாளர் தகவல்

(கொழும்பு)

நடைபெற்றுவரும் க.பொ.த உயர்தரப் பரீட்சையின் கணக்கீட்டு வினாத்தாள்,பாடத் திட்டத்திற்கு அமைவாகவே தயாரிக்கப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

புதிய பாடத்திற்கமைவான கணக்கீட்டு வினாத்தாளில் பல்வேறு குறைபாடுகள் நிலவியதாகவும் விடையளிப்பதற்கு சிரமமாக இருந்ததாகவும் மாணவர்கள் தெரிவித்தனர். அத்துடன் தாம் பயிற்சிகளில் ஈடுபட்ட மாதிரி வினாத்தாள்களில் அடங்கும் முறைகளுக்கு மாறாக குறித்த வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டதாக நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

மாணவர்களின் இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையானவையென பல்கலைக்கழக கணக்கீட்டு விரிவுரையாளர்களும் தெரிவித்தனர்.

இவர்களின் இந்தக் கருத்துத் தொடர்பாகவே பரீட்சை ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரத்தியேக ஆசிரியர்களின் தவறான வழிநடத்தல்களே மாணவர்களின் அளெகரியத்திற்கு காரணமெனவும் தவறுகள் ஏதாவது காணப்பட்டால் அதுதொடர்பில் கவனம் செலுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# பக்தர்களின் வருகை அதிகரிப்பால் மேலதிக பொலிஸார் கடமையில்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் வருடாந்தத் திருவிழாவின் மஞ்சத திருவிழாவுக்குப் பின்னர் மேலதிக பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பக்தர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகளவில் அதிகரித்ததை அடுத்து பொலிஸாரின் பணிகளும் அதிகரித்து காணப்பட்டது.

பக்தர் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதில் பொலிஸாலும் தொண்டர் அமைப்புகளும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் பொலிஸார் கூடுதலாக சிவில் உடையிலும், சிருடையிலும் தமது பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

திருமஞ்சத் திருவிழாவுக்குப் பின்னர் மக்களின் வருகை மென்மேலும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேசமயம் யாழ்.மாநகராட்சி மன்றத்தின் பவுசர் வாகனங்கள் மூலம் ஆலய வீதி எங்கும் அதிகாலையிலும் மாலை வேலைகளிலும் தண்ணீர் தெளித்து தூய்மையாக்கப்பட்டுவருகின்றன. (வி)

## கிளிநொச்சி மாவட்டத்தில் மின் இணைப்பு வேலைகள்

(முரசுமோட்டை)

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கான மின்னிணைப்பு வேலைகள் நடைபெற்றுவருவதாகவும், அடுத்த வருடமளவில் மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் மின்விநியோகம் வழங்கப்படும் என கிளிநொச்சி மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தின் அதிகளவான பிரதேசங்களுக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டிருக்கும் நிலையில் இடைஇடையே இவ்விநியோகத்தில் தடைகள் ஏற்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (110)

# நிர்வாக சபைத் தெரிவும் எடுக்கப்பட்ட தீர்மானங்களும்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் தெற்கு வள்ளுவர் சனசமூக நிலைய புதிய நிர்வாகசபைக் கூட்டம் நேற்று காலை 11 மணியளவில் நிலையத்தில் நடைபெற்றது.

இதில் சுப்பிரமணியம் மணிராசா தலைவராகவும்,முருகன் வேலையா உபதலைவராகவும், சி.யோகராஜா செயலாளராகவும் செ.அஜித்குமார் உப செயலாளராகவும் மாணிக்கம் இராஜரட்ணம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 5 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக இக்கூட்டம் நடைபெற்றுள்ளதாகவும் இக்கூட்டத்தில் வீதி அகலிப்புமதகு பாலம் புனரமைப்பு மலசலகூடங்கள் நிர்மாணம் மற்றும் மீளக்குடியமர்ந்த மக்களின் விபரங்களை சேகரித்தல் போன்ற விடயங்கள் செயற்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

# பரீட்சை மண்டபம் இடமாற்றம்

(பருத்தித்துறை)

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த பாடசாலைகளுக்கான பரீட்சை மண்டபம் யாழ். விக்னேஸ்வராக் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இதன்படி கரவெட்டி கிழக்கு அ.த.க பாடசாலை,கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்,கரவெட்டி சரஸ்வதி, மகாவித்தியாலயம்,ஸ்ரீ நாரதா வித்தியாலயம்,விக்னேஸ்வரா ஆரம்ப பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கான பரீட்சை நிலையமே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (109)

# இப்தார் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புதிய மொஹிதீன் ஜும்மாப் பள்ளியில் மக்கள் பணிமனை அனுசரனையில் "இப்தார்" நிகழ்வு கடந்த ஞாயிறு மாலை நடைபெற்றன.

யாழ்.மாநகரசபை உறுப்பினர் எம்.சுபியான் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ரம்ழான் மாதத்தின் சஸ்கைமிக்க நோன்பை நோற்ற ஏராளமானவர்கள் பக்தியுடன் கலந்து கொண்டார்கள். (105)

# கிரகங்களிலிருந்து விழும் துணிக்கைகளை இலங்கையர்களும் காணவாய்ப்பு

(கொழும்பு)

கிரகங்களில் இருந்து துணிக்கைகள் பூமிக்கு விழுவதை காண்பதற்கான அரிய சந்தர்ப்பம் இலங்கை மக்களுக்கு தற்போது கிடைத்துள்ளது.

கடந்த சனிக்கிழமை ஆரம்பமான இந்த கிரகங்களின் துணிக்கைகள் விழுதலை எதிர்வரும் சில தினங்கள் அதிகாலை 2 மணிக்குப் பின்னர் பார்க்க முடியும் என இலங்கை வானியல் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் காவன் ரத்னதுங்க குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் அண்மையில் பூரணை ஏற்பட்டமையாலும் முகில்கள் அதிகளவில் காணப்படுகின்றமையாலும் இதனை மிகவும் தெளிவாகப் பார்க்க முடியாதுள்ளதாக அவர் கூறினார்.

முகில்கள் அற்ற பகுதிகளில் இதனை தெளிவாகப்பார்க்கலாம் என காவன் ரணதுங்க கூறினார்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இந்த முறை கிரகங்களில் இருந்து விழும் துணிக்கைகளின் அளவு மிகவும் குறைந்தளவிலே உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# வலிகாமம் வலயப் பாடசாலைகளின் ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

(மருதனார்மடம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை கோட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆங்கில மொழித் திறன் போட்டி முடிவுகள் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரனால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறற மாணவர்கள் விபரம் வருமாறு-

**உறுப்பெழுத்து**

**தரம் - 03**

ஏ.கௌதமன் - உடுவில் மகளிர் கல்லூரி, கே.வேல்விழி - மணிகண்டன் ம.வி, ரி.தனுஷா - தங்கம்மா அப்பாக்குட்டி வித்தி.

**தரம் - 04**

ஏ.கின்சி - உடுவில் மகளிர் கல்லூரி, கே.நந்தாயினி - மானிப்பாய் மகளிர் கல்லூரி, எம்.வக்சிகா - சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி.

**தரம் - 05**

ஈ.சௌமியா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, எஸ்.நிதுர்ஜினி - இணுவில் மத்திய கல்லூரி, ஏ.மயூரி - யாழ்ப்பாணக் கல்லூரி.

**தரம் - 06**

ஆர்.சைலஜா - யாழ்ப்பாணக் கல்லூரி, ஜி.சார்லியா ஹன்சினி - இளவாலை கன்னியர் மடம், எஸ்.நிஷாலினி - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**தரம் - 07**

பி.கோபிகா - யாழ்ப்பாணக் கல்லூரி, ஜி.கீர்த்தனா - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, என்.சகிந்தா - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

**தரம் - 08**

எம்.சைலஜா - உடுவில் மகளிர் கல்லூரி, வை.சிந்துஜா - சுதுமலை வடக்கு த.ம.வி, ஜே.நிரோஜினி - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

**தரம் - 09**

எஸ்.சாளினி - மகாஜனக் கல்லூரி, பி.சுரேக்கா - இளவாலை கன்னியர் மடம், கே.கருணியா - உடுவில் மகளிர் கல்லூரி.

**தரம் - 10**

எஸ்.சிந்துஜா - யூனியன் கல்லூரி, ஆர்.லக்சிகா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, எஸ்.அபிராமி - உடுவில் மகளிர் கல்லூரி.

**தரம் - 11**

வி.துவாரகா - யூனியன் கல்லூரி, ரி.கீர்த்தனா - யூனியன் கல்லூரி, கே.கசிந்தினி - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**தரம் - 12**

என்.சோபனா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, எம்.தர்சிகா - அருணோதயாக் கல்லூரி, கே.மேகலைவாணி - யாழ்ப்பாணக் கல்லூரி.

**தரம் - 13**

ஐ.டன்சிகா - யூனியன் கல்லூரி, பி.வானதி - மானிப்பாய் மகளிர் கல்லூரி, கே.சர்மிகா - சங்கானை சிவப்பிரகாச வித்தி.

**பேச்சு**

**தரம் - 03**

ஏ.ஆர்.நிசாரா - இராமநாதன் கல்லூரி, ஏ.மதுசாயினி - இளவாலை கன்னியர் மடம், என்.விஷ்ணுகா - யாழ்ப்பாணக் கல்லூரி.

**தரம் - 04**

எம்.தர்மிகா - உடுவில் மகளிர் கல்லூரி, ஆர்.மதுமிதா - மகாஜனக் கல்லூரி, மார்தனிருபினு கூல் -யாழ்ப்பாணக கல்லூரி, கே.திலக்சிகா - சித்தன்கேணி சிறிகணேசா வித்தி.

**தரம் - 05**

ரி.ஆதர்சினி - உடுவில் மகளிர் கல்லூரி, ஏ.றொமந்தி - யாழ்ப்பாணக் கல்லூரி, ரி.பிசித்திகா - உடுவில் மகளிர் கல்லூரி.

**தரம் - 06**

எஸ்.மதுசாயினி-உடுவில் மகளிர் கல்லூரி, பி.சாரங்கி - யாழ்ப்பாணக் கலலூரி, எஸ்.சௌமிகா - யாழ்ப்பாணக் கலலூரி, எஸ்.சாகித்தியா - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**தரம் - 07**

என்.அமென்டா - யாழ்ப்பாணக் கல்லூரி, ஆர்.தர்சிகா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, ஜி.மாதங்கி - யாழ்ப்பாணக் கல்லூரி.

**தரம் - 08**

என்.நிசோதா - யாழ்ப்பாணக் கல்லூரி, வி.பவித்திரா - மானிப்பாய் சென்.ஆன்ஸ் ஆர்.சி.ரி.எம்.எஸ், ஏ.எச்.எஸ்.பி.என். சிறிபாணுஜா - உடுவில் மகளிர் கல்லூரி, எஸ்.திலக்சி - உடுவில் மகளிர் கல்லூரி.

**தரம் - 09**


ஜே.சலோமி ஜெபிதா - உடுவில் மகளிர் கல்லூரி, ஜே.ஆதித்தன் - யாழ்ப்பாணக் கல்லூரி, நடராஜா நோக் - யாழ்ப்பாணக் கல்லூரி. (தொடரும்......)

---

## நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு

## தினமுரசு நாளிதழ் நடத்தும் மாபெரும் பொது அறிவுப் போட்டி

**பங்குபற்றுங்கள்! பரிசுகளை அள்ளுங்கள்**



1. பொதுவாக ஒருவரின் சொந்த நாட்டை தாய்நாடு என்றே அழைப்பர். ஆனால் அதை 'தந்தையர் நாடு' என அழைத்தவர் யார்?
1) திருவள்ளுவர் 2) பாரதியார்
3) பாரதிதாசன் 4) நீலாவணன்

2. ஈழத்தில் 'மஹாகவி' என்ற புகழ்பெற்ற தமிழ்க் கவிஞரின் இயற்பெயர் என்ன?
1) சின்னத்துரை 2) சுப்பிரமணியம்
3) உருத்திரமூர்த்தி 4) சோமசுந்தரம்

3. தமிழ் செம்மொழி மாநாட்டு பாடலை எழுதியவர் யார்? அதற்கு இசையமைத்தவர் யார்?
1) சுந்தரம்பிள்ளை, எம்.எஸ்.விஸ்வநாதன்
2) அண்ணாத்துரை, எம்.பி.சீனுவாசன்
3) பாரதிதாசன், இளையராஜா
4) கருணாநிதி, ஏ.ஆர்.ரஹ்மான்

4. மல்லிகை பத்திரிகை ஆசிரியர் யார்? அவர் எழுதிய எந்த நூலுக்கு சிறிலங்கா சாகித்திய மண்டல விருது கிடைத்தது?
1) டொமினிக் ஜீவா, தண்ணீரும் கண்ணீரும்
2) ஞானசேகரம், குருதிமலை
3) தெளிவத்தை ஜோசப், காலங்கள் சாவதில்லை
4) செ. கணேசலிங்கன், சடங்கு

5. தங்கத் தாத்தா என அழைக்கப்பட்ட ஈழத்து கவிஞர் யார்?
1) விபுலானந்தர் 2) குமாரசாமிப் புலவர்
3) சோமசுந்தரப் புலவர் 3) ஆறுமுக நாவலர்

6. பன்னிரு திருமுறைகள் எத்தனையாம் நூற்றாண்டில் எநத மன்னனின் ஆட்சியில் தொகுக்கப்பட்டது?
1) 10 ஆம் நூற்றாண்டு, ராஜராஜசோழன்
2) 07 ஆம் நூற்றாண்டு, மகேந்திர பல்லவன்
3) 14 ஆம் நூற்றாண்டு, குலசேகர பாண்டியன்
4) 16 ஆம் நூற்றாண்டு, கிருஷ்ண தேவராயர்

7. ஆறுமுகநாவலர் அவர்கள் யாருடைய வேண்டுதலின் பெயரில் 'பைபிளை' தமிழில் மொழிபெயர்த்தார்.
1) சி.வை.தாமோதரம்பிள்ளை
2) தாவீது அடிகளார்
3) பீற்றர் பேர்சிவல் பாதிரியார்
4) மவுண்ட்பேட்டன் பிரபு

8. இசைப்பாடல்களால் அமைந்த வேதம் எது?
1) இருக்கு 2) யசுர்
3) சாமம் 4) அதர்வணம்

9. பத்தாம் திருமுறை எது? அதன்ன எழுதியவர் யார்?
1) தேவாரம், திருநாவுக்கரசர்
2) கந்தபுராணம், கச்சியப்பர்
3) திருப்புராணம், சேக்கிழார்
4) திருமந்திரம், திருமூலர்

10. அபிராமி அந்தாதியை எழுதியவர் யார்?
1) சோமசுந்தரப் புலவர் 2) சக்திமுற்றப் புலவர்
3) எஸ்.வி.சுப்பையா 4) அபிராமிப்பட்டர்

11. திருக்கோணேஸ்வரப் பதிகம் யாரால் பாடப்பட்டது?
1) திருஞானசம்பந்தர் 2) சுந்தரமூர்த்திநாயனார்
3) கோணேசநாதர் 4) இராவணேசன்

12. 'கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்' என்ற கீர்த்தனையை எழுதியவர் யார்?
1) முத்துசுவாமி தீட்சிதர் 2) அருணாசலக் கவிராயர்
3) வீரமணி ஐயர் 4) இராமலிங்க வள்ளலார்

13. 'மருணீக்கியார்' என்ற பெயரைக் கொண்டிருந்த சமயகுரவர் யார்?
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) மாணிக்கவாசகர் 4) சுந்தரமூர்த்தி நாயனார்

14. இணையற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஜன்ஸ்டீன் கண்டு பிடித்த புகழ்பெற்ற கோட்பாட்டின் பெயர் என்ன?
1) வானவியல் கோட்பாடு 2) சார்பியல் கோட்பாடு
3) அளவையியல் கோட்பாடு 4) காந்தவியல் கோட்பாடு

15. 'சினிமா என் சாதனை, வீணை என் ஆராதனை' எனக் குறிப்பிட்ட திரைப்பட இயக்குநரான இசை மேதை யார்?
1) ஜி.என்.பாலசுப்பிரமணியம் 2) ரவிசங்கர்
3) கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் 4) எஸ்.பாலச்சந்தர்

16. 'லயஞான குபேர பூபதி' பட்டம் பெற்ற தவில் வாத்திய மேதை யார்?
1) வலயப்பட்டி சண்முகசுந்தரம் 2) நடராஜசுந்தரம்
3) தட்சணாமூர்த்தி 4) இணுவில் சின்னராசா

17. யாழ்ப்பாணத்தில் "கலைமகள் சரஸ்வதிக்கு" ஒரு சிறு கோவில் உண்டு. அது அமைந்துள்ள இடம் எது?
1) கீரிமலை 2) கொக்குவில்
3) நல்லூர் 4) அரியாலை

18. அதிகளவில் பக்திப் படங்களை இயக்கி அருட் செல்வர் என்ற பட்டம் பெற்ற இயக்குநர் யார்?
1) கே.பாலச்சந்தர் 2) இராம நாராயணன்
3) பி.மாதவன் 4) ஏ.பி.நாகராஜன்

19. நாரதர், அகத்தியர், இராவணன் மூவரும் ஒரு கலையில் வல்லவர்கள் அக்கலை எது?
1) நாட்டியக்கலை 2) இசைக்கலை
3) சிற்பக்கலை 4) மந்திரக்கலை

20. தினமுரசு தினப்பத்திரிகையாக எப்போதிருந்து வெளிவரத் தொடங்கியது?
1) 2002 ஐப்பசி 01 ஆம் திகதி
2) 2010 ஐப்பசி 01 ஆம் திகதி
3) 1990 மாசி 19 ஆம் திகதி
4) 1993 தை 01 ஆம் திகதி

## நிபந்தனைகள்

- 20 வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு கேள்வியின் கீழும் தரப்பட்டிருக்கும் நான்கு விடைகளில் சரியான விடையின் கீழ் கீறிட வேண்டும்.
- தினமுரசு நாளிதழில் உள்ள இந்தப் படிவத்திலேயே சரியான விடைகளின் கீழ் கீறிட்டு, படிவத்தைக் கத்தரித்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வேறு தாள்களில் எழுதி அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.
- விடைகள் யாவும் இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் அலுவலகத்திலும் அல்லது நல்லூரில் திருவிழாக் காலத்தில் அமைந்திருக்கும் எமது அலுவலகப் பந்தல்களிலும் ஒப்படைக்கலாம்.
- விடைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 28.08.2011
- போட்டி முடிவுகள் நல்லூர்த் தேர்த்திருவிழா அன்று அறிவிக்கப்படும். அன்றைய 'தினமுரசு' நாளிதழில் வெளியிடப்படும். பரிசில்கள் பூங்காவனத் திருவிழா (29.08.2011) அன்று வழங்கப்படும்.
- போட்டி தொடர்பான தனிப்பட்ட கடிதத் தொடர்புகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தினமுரசு குடும்பத்தின் ஊழியர்கள் எவரும் போட்டியில் பங்குபற்ற முடியாது.
- தகைமை சார்ந்த தேர்வாளர்களின் தீர்ப்பே இறுதிமுடிவாகும்.

பெயர் : ....................................................


முகவரி : ....................................................

....................................................

தொ.பேசி இலக்கம்: ............................ ............................

கையொப்பம்


# இரத்தத்தில் ஐஸ்கிறீம்





ஒஸ்ரியா நாட்டை சேர்ந்த புகைப்படக் கலைஞரான ஜஸ்மின் சுல்லெர் என்பவர் பன்றியின் இரத்தம், கொழுப்பு என்பவற்றின் மூலம் ஐஸ் கிறீம் வகைகளை தயாரித்து தனது அல்பத்தில் இடம் பெற வைத்துள்ளார். இதற்காக இவர் சுமார் 2 லீற்றர் இரத்தத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

# உள்ளங்காலிலுமா?



மருத்துவ வரலாற்று அதிசயம் ஒன்று நிகழ்ந்துள்ளது பெண் ஒருவருக்கு மூன்றாவது மார்புக் காம்பு கால் பாதத்தில் முளைத்துள்ளது முதன் முறையாக 22 வயதுப்பெண் ஒருவருக்கே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.. ஏற்கனவே மார்பகத் திசு வளரும் பிரச்சினையால் ஐந்தில் ஒரு பெண்கள் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சில்லறைக்கு கார்



சீன மா வியாபாரி ஒருவர் சில்லறைக்காசுகளைப் பயன்படுத்தி கார் ஒன்றை கொள்முதல் செய்துள்ளார். வாங் எனும் இவ் சீன வியாபாரி ஒகஸ்ட் 1 இல் கார் வாங்குவதற்காக சாங்ஸ்சி மாகாணத்திலுள்ள அன்யங் நகரத்தில் ஓர் கார் காட்சியறைக்கு நண்பியின் காரில் வந்தார். வந்தவர் திடுதிடுவென காரிலிருந்து 300 கிலோக் கிராம் நிறையுள்ள 7 சாக்குப்பைகளை கீழே இறக்கினார். இந்த வினோத செயற்பாட்டைக் கண்ட கார் காட்சியறை ஊழியர் ஒருவர் விசாரித்த போது தான் அவர் 60000 யுவான் ($9600) பெறுமதியான சில்லறை நாணயங்களை வைத்திருப்பதாகவும், அதனைப் பயன்படுத்தி கார் வாங்கப்போவதாகவும் தெரிவித்தார்.



மிரண்டுபோன காட்சியறை உரிமையாளர் முதலில் தயங்கினாலும், காசை எண்ணி முடித்ததும் தான் காரைக் கொண்டு செல்லலாம் எனும் நிபந்தனையோடு சம்மதித்தார்.

# Cricket விளையாடும் அனைவருக்கும்

கிராமம் முதல் நகரம் வரை கிரிக்கெட் விளையாட்டு விளையாடாத இடம் என்று எதுவுமில்லை அந்த அளவிற்கு தேசிய விளையர்ட்டைக் காட்டிலும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் கிரிக்கெட் விளையாட்டின் ஸ்கோக் போர்டு -ஐ கணினி மூலம் உருவாக்க ஒரு இலவச டூல் உள்ளது இதைப்பற்றித்தான் இந்தப்பதிவு. தறவிரக்க முகவரி:- http://download.cnet.com/Laver-and-Woods-Cricket-Scorebook/3000-2136_4-10573041.html :

இத்தளத்திற்குச் சென்று கிரிக்கெட் விளைட்டிற்கு ஸ்கோர் போர்டு உருவாக்க விரும்பும் இந்த டூலை இலவசமாக தறவிரக்கிக்கொள்ளலாம். கிராமத்தில் உள்ள ஒவ்வொரு அணியும் வாரம் ஒரு முறை அல்லது மாதத்திற்கு என்று வைத்து கொள்ளும் விளையாட்டுப்போட்டியின் ஸ்கோர்போடு-ஐ இந்த டூல் மூலம் உருவாக்கலாம், தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரின் திறமையும் இதில் துல்லியமாக பதிவு செய்யப்பட்டிருக்கும், உதாரணமாக சிறந்த baller ஒருவரை ஒரு மாவட்டத்தில் இருந்து தேர்ந்தெடுக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம், அப்போது ஏற்கனவே நாம் விளையாடிய விளையாடின் target கணினியில் இருக்கும் அதைக்காட்டி வாய்ப்பு கேட்கலாம், ஒவ்வொரு முறை போட்டி முடிந்ததும் ஸ்கோர்போடு பிரிண்ட் செய்து கொள்ளும் வண்ணம் இந்த டூல் வடிவமைக்கப்பட்டு இருக்கிறது, தங்கள் அணிக்கென்று ஒரு வலைப்பூ உருவாக்கி இது போன்ற திறமைகளை வெளிஉலகத்திற்கு காட்டலாம், உள்ளூரில் உங்களை மதிக்கா விட்டாலும் பரவாயில்லை, யாருக்குத் தெரியும் நாளை வெளிநாட்டு அணிக்கு கிரிக்கெட் விளையாடும் வாய்ப்பும் கிடைக்கலாம்

# ஒரே நேர அரட்டைக்கு

பிரபல தளங்களின் உதவியுடன் நாம் நமது நண்பர்களுடன் அரட்டை அடித்து மகிழ்கிறோம். இந்த சேவையை பல தளங்கள் வழங்கினாலும் ஜிமெயில், பேஸ்புக் மற்றும் யாகூ இவை மூன்றும் தான் மிகப்பிரபலமான தளங்கள். இந்த தளங்களில் நண்பர்களுடன் அரட்டை அடித்து மகிழ்ந்தாலும் இந்த மூன்று தளத்திலும் ஒரே நேரத்தில் அரட்டை அடிக்க முடியவில்லை என்பது வருத்தமே.

ஏனென்றால், ஒவ்வொரு தளத்திற்கும் நண்பர்களின் வட்டம் மாறும் ஜிமெயிலில் யாருடனாவது பேசிக்கொண்டிருந்தால் பேஸ்புக் நண்பர்களிடம் அரட்டை அடிக்க முடியாது. பேஸ்புக்கில் அரட்டை அடித்து கொண்டிருந்தால் ஜிமெயில், யாஹு நண்பர்களிடம் அரட்டை அடிக்க முடியாது. இந்த பிரச்சினை இனி இல்லை ஜிமெயில், பேஸ்புக், யாஹு என மூன்றிலும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் அரட்டை செய்து கொள்ளலாம். இந்த தளத்திற்கு சென்று புதிதாக உறுப்பினராகிக் கொள்ளவேண்டிய அவசியமும் இல்லை ஏற்கனவே நமக்கு உள்ள பேஸ்புக் கணக்கு மூலம் உறுப்பினராகிக் கொள்ளும் வசதி உள்ளது. ஏதாவது ஒரு முறையில் உறுப்பினர் ஆகி கொள்ளுங்கள். உறுப்பினராகிக் உடன் உங்கள் விண்டோவில் வலது பக்கத்தின் கீழே ஒரு மெனுபார் போன்று இருக்கும்.

அரட்டை என்ற பகுதியில் ஜிமெயில், பேஸ்புக், யாஹு மற்றும் ibibo போன்ற ஐகான்கள் இருக்கும். அதில் ஒவ்வொன்றிலும் கிளிக் செய்து உங்கள் கணக்குகளில் நுழைந்தால் ஒன்லைனில் உள்ள நண்பர்களின் பட்டியல் உங்களுக்கு காட்டப்படும். அந்த நண்பர்களுக்கு நேராக அவர்கள் எந்தத் தளத்தில் ஓன்லைனில் உள்ளார்கள் என கண்டறிய ஏதுவாக அவர்களின் பெயருக்கு நேரே அதற்க்கான லோகோக்களும் காண்பிக்கப்படும். இதில் உங்களுக்கு தேவையான நண்பரின் ம்து கிளிக் செய்தால் அரட்டை பக்கம் திறக்கும். அ்தில் அவருடன் நீங்கள் அரட்டை அடித்து கொள்ளலாம். மேலும் ஓன்லைனில் இருப்பதை மற்றவர்களுக்கு தெரியாமல் மறைக்கவும் இதில் வசதியை கொடுத்து இருக்கின்றனர். இதில் உள்ள Go offline என்பதை கிளிக் செய்தால் நீங்கள் ஒன்லைனில் இருப்பதை மற்றவர்களுக்கு தெரியாமல் மறைத்து கொள்ளலாம். அவ்வளவு தான் ஒவ்வொரு தளத்திற்கும் சென்று நேரத்தை வீணடிக்காமல் ஒரேயிடத்தில் அனைத்து நண்பர்களுடனும் பேசி மகிழலாம்.

இணையதள முகவரி:- http://www.ibibo.com/

கணினி மூலை

# சிக்குன் குனியாவிற்கு மருந்து


சிக்குன் குனியா காய்ச்சலுக்கான தடுப்பூசி மருந்தை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். கடும் காய்ச்சலோடு மூட்டு வலியை ஏற்படுத்தும் சிக்குன் குனியா நோய்க்கு தடுப்பூசி கண்டுபிடிக்கப்படாமல் இருந்தது. தற்போது அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சிக்குன் குனியாவை தடுக்க வழி செய்யும் மருந்தை கண்டுபிடித்துள்ளனர். மரபணு மாற்றம் செய்யப்பட்ட சிக்குன் குனியா வைரசைக்கொண்டு இந்த மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்து பரிசோதனை ரீதியாக எலிக்கு பயன்படுத்தப்பட்டு அதில் வெற்றி காணப்பட்டுள்ளது. ஆனாலும் இந்த மருந்துக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

மனிதர்களுக்கு இந்த மருந்து எந்த விதத்தில் வேலை செய்கிறது என்பது உள்ளிட்ட சோதனைகள் முடிந்த பின் இதற்கு அனுமதி கிடைக்கும். இந்த தடுப்பூசி தயாரிப்பு செலவும் குறைவு தான் என டெக்சாஸ் பல்கலைக்கழக விஞ்ஞானி ஸ்கேட் வீவர் தெரிவித்துள்ளார்.

# எலக்ட்ரோனிக் மூலமும்


ஒரு நோயாளியின் உடல் நிலை மின் பரிசோதனை மூலம் செய்யப்படுகிறது. தற்போது எலக்ட்ரோனிக் தோல் மூலம் அவற்றை கண்டறிய முடியும். அதை அமெரிக்காவில் உள்ள இல்லினாய்ஸ் பல்கலைக்கழக நிபுணர் ஜோன்



ஏ.ரோஜர்ஸ் தலைமையிலான குழுவினர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தத் தோல் எலக்ட்ரோனிக் கலவையால் தயாரிக்கப்பட்டது. மனிதனின் தலை முடியை விட மிகவும் மெலிதானது. இதை பாலியஸ்டரால் பேக்கிங் செய்யப்பட்டுள்ளது. இந்த எலக்ட்ரோனிக் தோல் பசை போன்று ஒட்டிக் கொள்ளக்கூடியது. அதை நோயாளியின் மணிக்கட்டில் டாட்டு(பச்சை குத்துதல்) போன்று 24 மணி நேரம் அதாவது ஒருநாள் முழுவதும் ஒட்டிக் கொள்ள வேண்டும்.

அந்த தோல் நோயாளியின் உடல் வெப்பநிலை, இதயத் துடிப்பு போன்ற உடல் நிலையை கணக்கிட்டு அறிவிக்கும். உடலில் உள்ள உணர்வுகள் மூலம் இவை கண்டறியப்படுகிறது. இதன் மூலம் மூலையின் அதிர்வுகள், தசைகளின் இயக்கம், உடலில் இருந்து வெளியேறும் வெப்பம், பேச்சின் தன்மை போன்றவற்றைக் கண்டு பிடிக்க முடியும். மேலும் காயத்தின் தன்மையை அறிந்து அவற்றை குணப்படுத்தவும் இது உதவும்.



# நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த சில தீய சக்திகள் கடும் முயற்சி

## சுதந்திர தின உரையில் பிரதமர் மன்மோகன்சிங்



(புதுடில்லி)

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி அமைதியைச் சீர்குலைக்க சில தீய சக்திகள் முயற்சி செய்து வருவதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் உள்ள செங்கோடடையில் இடம்பெற்ற இந்தியாவின் 65 ஆவது சுதந்திரதின நிகழ்வில் கலந்துகொண்டு தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முப்படையினரின் அணிவகுப்புடன் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கோலாகலமாக இந்த நிகழ்வு இடம் பெற்றது.

அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் வறுமையை ஒழிக்க அரும்பாடுபட்டு வருகிறோம். ஊழல் நாட்டின் வளர்சிப்பாதைக்கு தடையாக உள்ளது. ஊழலுக்கு எதிரானவர்கள் மீது இந்த அரசு சட்டபூர்வ நடவடிக்கையை துரிதமாக எடுத்து வருகிறது. பலமான லோக்பால் மசோதாவை உருவாக்க அரசு முனைந்து செயற்பட்டு வருகிறது.

ஊழலை ஒழிக்க இந்த மசோதா பயன் தரும். உண்ணாவிரதமோ, போராட்டமோ வலுவான லோக்பால் மசோதாவை உருவாக்க முடியாது.

நாடாளுமன்றத்தில் தான் இறுதி முடிவு எடுக்க வேண்டும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முக்கியத்துவம் அளித்து வருகிறோம்.

நிலம் கையகப்படுத்துதல் விவசாயிகளை பாதிக்காதவாறு பார்த்துக் கொள்ளப்படும். இதற்கென விரைவில் புதிய சட்டம் இயற்றப்படும், வறுமையை ஒழிக்க அனைவரும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும். கல்வி வளர்ச்சிக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என்றார்.

# மனைவியுடன் காணாமற்போன ஹீரோ

(ஊட்டி)

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தொகுபபாளராக அறிமுகமாகி விஜய் ரி.வி.யில் ஒளிப்பரப்பான காதலிக்க நேரமில்லை தொடர் மூலம் பிரபலமானவர் நடிகர் பிரஜின்.

இப்போது சுற்றுலா என்ற படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு குன்னூர் பகுதியில் கடந்த 10 நாட்களாகவே நடந்து வருகிறது.

படப்பிடிப்பிற்கு நடிகர் பிரஜன் தனது மனைவி சான்ட்ரா வந்திருந்தார். இந் நிலையில் வழக்கமாக நேற்றுப் படப்பிடிப்பு தொடங்க இருந்தபோது நடிகர் பிரஜனும், அவரது மனைவியும் காணாமற்போய இருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து படத்தின் தயாரிப்பு மேலாளர் பாரதி, குன்னூர் பொலிஸில் புகார் கொடுத்துள்ளார்.

இதுகுறித்துப் பொலிஸார் விசாரனை நடத்தி வருகின்றனர். பிரஜனும், அவரது மனைவியும் காணாமற்போய் இருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

# வெங்கடேசப் பெருமாளுக்கு 900 கிலோ வெள்ளி வாசல்



(நகரி)

திருப்பதி வெங்கடேசப் பெருமாள் கோவில் வெள்ளி வாசல், 900 கிலோ வெள்ளியைப் பயன்படுத்தி, புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.

திருமலையில் உற்சவ விழாக்களில், ஏழுமலையானின் உற்சவ வாகனங்களை எடுத்துச் செல்லும்போது, வெள்ளி வாசல் கதவுகளில் படுவதால், வெள்ளித் தகடுகள் பழுதடைந்துள்ளன. இதனால், வெள்ளி வாசலைச் சீரமைத்துப், புதுப்பிக்க முடிவு செய்துள்ளதாக, திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

வெள்ளித் தகடுகள் அமைப்பதற்கு, 900 கிலோ வெள்ளி தேவைப்படும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது, 200 கிலோ வெள்ளியை உபயோகப்படுத்தி, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வெள்ளி வாசல் பணிக்கு, 100 சதவீதம் தரமான வெள்ளியை உபயோகிக்க, ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

# தமிழ் நாட்டின் வளர்ச்சிப் பணிக்கு மத்திய அரசு தாராள நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் ஜெயந்தி நடராஜன்



(சென்னை)

தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்று மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் .ஜெயந்தி நடராஜன் கூறியுள்ளார்.

முன்னாள் முதல்வர் கருணாநிதியை சென்னை கோபாலபுரம் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை அவர் சந்தித்தபின்னர் ஜெயந்தி நடராஜன் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்-

மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் மரியாதை நிமித்தமாக கருணாநிதியைச் சந்தித்தேன்.

முதல்வர் ஜெயலலிதா சொல்வது போல் அல்லாமல், தமிழ்நாட்டின் வளர்ச்சித் திடடங்களுக்கு மத்திய அரசு தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. தொடர்ந்தும் தாராளமாக வழங்கும். ஏற்கெனவே உள்ள சட்ட முறைகள்படி எந்தளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமோ அதை முறையாக அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது.

# ராஜீவ் கொலை வழக்கில் மீள் விசாரணைகள் அரசும், நீதிமன்றமுமே தீர்மானிக்க வேண்டும்

## முன்னாள் புலனாய்வுத் தலைவர் கார்த்திகேயன் கூறுகிறார்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு மீண்டும் விசாரிக்கப்பட வேண்டும் என்று சிலர் கோரி வருகின்ற நிலையில், அரசும் நீதிமன்றமும் அப்படிக் கருதினால் அதைச் செய்யட்டும் என்று அந்த விசாரணையை நடத்திய சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவரான டி.ஆர். கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

ராஜீவ் காந்தியைக் கொலை செய்தது யார், ஏன், எப்படி என்கிற விசாரணை பொறுப்பு கொடுக்கப் பட்டது. அதை இந்திய சட்டப்படி விசாரித்து, தடயங்க்ளை சேகரித்து நீதிமன்றத்தில் ஒப்படைத்தோம். நீதிமன்றம் விசாரணை நடத்தி தீர்ப்பைக் கொடுத்தது. எனினும் மறு விசாரணை தேவை என்று எழுந்துள்ள கோரிக்கைகள் குறித்து நான் கருத்து ஏதும் சொல்லும் நிலையில்



இல்லை. அரசும் நீதிமன்றமும் இது குறித்து முடிவெடுக்கலாம். நாங்கள் விசாரணைகளை நடத்தியதைத் தவிர எங்களுக்கு இந்த வழக்குத் தொடர்பில் எந்த விதமான விருப்பு வெறுப்புகளும் இல்லை.

இலங்கையில் தமிழ் மக்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்பட்டதே அங்கு நடைபெற்ற போராட்டத்துக்கு காரணம் என்பதை இந்த வழக்கின் விசாரணை தொடர்பில் நான் எழுதிய புத்தகத்தில் குறிபபிட்டுள்ளேன்.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூன்று பேரும் மேல் முறையீடு செய்தால் அது குறிதது சம்பந்தப்பட்ட அதிகாரிகளே முடிவெடுக்க வேண்டும் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாக எமது குழு நடத்திய விசாரணைகள் எம்மைப் பொறுத்த வரையில் மறந்து போன விடயம் என்றும் அவர் தெரிவித்தார்.

# ராஜீவ் காந்தி படுகொலை விவகாரத்தில் மறுவிசாரணைக்கு உத்தரவிட வேண்டும்

## புதிய தமிழகம் கட்சி கோரிக்கை

(மதுரை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் படுகொலை குறித்து, மறுவிசாரணைக்கு மத்திய, மாநில அரசுகள் உத்தரவிட வேண்டும் என, புதிய தமிழகம் தலைவர் கிருஷ்ணசாமி கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - ராஜீவ் கொலை வழக்கு விசாரணை வெளிப்படையாக நடக்கவில்லை. இக்கொலையில், சர்வதேச சதி மற்றும் பல்வேறு விதமான தொடர்புகள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட எம்.டி.எம்.ஏ.மற்றும் ஜெயின் கமிஷன் விசாரணை அறிக்கைகள், கிடப்பில் போடப்பட்டுள்ளன. இக்கொலையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன் உட்பட மூவரது கருணை மனு, ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டுள்ளது. முக்கிய கொலை சம்பவத்தின் மூலகாரணத்தை கண்டறிவதற்கு முன், மூவருக்கும் மரண தண்டனையை நிறைவேற்றுவது, இயற்கை நியதிக்கு முரணானது. 20 ஆண்டுகளாக இவர்கள் சிறையிலுள்ளனர்.

ஆந்திராவில் ஏற்கனவே இருவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி, நிறுத்தி வைத்துள்ளனர். எனவே, மூவருக்கும் மரண தண்டனையை நிறுத்தி வைக்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, சட்டசபையில் வலியுறுத்துவேன். ராஜிவ் கொலை குறித்து மறுவிசாரணை நடத்த மத்திய, மாநில அரசுகள் உத்தரவிட வேண்டும் என்றார்.

# நாட்டைக் கெடுக்கும் ஊழல் புற்றுநோயை உடனடியாக வேரோடு அழிக்க வேண்டும்

## ஜனாதிபதி பிரதீபா பட்டீல்

(புதுடில்லி)

நமது நாட்டின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு மற்றும் சமூக வாழ்க்கை முறையை ஊழல் இன்று ஒரு புற்றுநோயைப்போல் பாதித்து வருகிறது இதை உடனடியாக வேரோடு ஒழிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அரசு, நாடாளுமன்றம், நீதித்துறை மற்றும் சமூக அமைப்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து அதற்கான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும் என இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீல் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற சுதந்திர தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரே மருந்தில் அனைத்து நோய்களையும் தீர்க்க முடியாது என்பது போல் ஒரே வழிமுறையில் ஊழலை ஒழித்துவிட முடியாது.

ஊழலுக்கு எதிராக தடுப்பு, தண்டனை, பகுத்தறிவு டன் கூடிய அணுகுமுறை போன்ற பல்வேறு நிலைகளில் நடவடிக்கை எடுக்க வேண்டும். நமது நாடு நிதானமான விவேகமான அறிவுடன் சிந்திக்கும் திறன் கொண்டது என்று போற்றப்



பட்டு வருகிறது. சமஸ்கிருதத்தில் சொல்லப்பட்டு இருப்பது போல், அதீத செயல்களைத் தவிர்க்க வேண்டும்.

நாடாளுமன்றம் போன்ற ஜனநாயக அமைப்புகளின் நம்பகத்தன்மை, அவற்றின் செயல் முறைகளின் அடிப்படையில் அரசியல் அமைப்பின் வரைமுறைக்கு உட்பட்டு அமைந்துள்ளது.

தேவைப்படும் போது சரியான நடவடிக்கை மூலம் அவற்றுக்குத் திறமையும், வலிமையும் சேர்க்க வேண்டும். இதில் தொடர்முயற்சி மேற்கொள்ளாவிட்டால் அவற்றின் நம்பகத்தன்மை அழிந்து விடும்.

நமது நாடாளுமன்றத்தில் சாதனைக்குரிய பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்தில் சுமுகமாக விவாதங்கள் நடைபெற வேண்டும் என்றார்.

# இந்தியாவுடனான பேச்சு முறிவடைய கார்கில் போரே முக்கிய காரணம்


(லாகூர்)

கார்கில் போர்தான் இந்தியாவுடனான அமைதிப் பேச்சுகள் முறிந்து போகக் காரணம் என்று பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் கூறியுள்ளதுடன் அதற்குக் காரணமாக இருந்தவர்கள் விசாரிக்கப்படும் நாள் வரும் என்று முன்னாள் இராணுவ தளபதி முஷாரபை மறைமுகமாகக் கூறினார்.

பாகிஸ்தானின் லாகூர் நகரில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற துணைக் கண்டத்தில் அமைதிப் பேச்சு கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது: அமைதி முயற்சிகளுக்கு இந்தியத் தலைவர்கள் ஆர்வமுடன் இருந்தனர். நானும் ஆர்வமுடன் இருந்த போதும் உள்நாட்டு நிர்பந்தங்களால் முழுமையாகச் செயற்பட முடியாமல் போனது.

உலகச் செய்திகள்

அப்போது இந்தியப் பிரதமராக இருந்த வாஜ்பாய், காஷ்மீர் உட்பட அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க ஆர்வமுடன் இருந்தது ஆச்சரியம் அளித்தது.



மற்றொரு இந்திய பிரதமர் நரசிம்ம ராவ் பாகிஸ்தானில் பொருளாதார சீர்திருத்தம் ஏற்பட விரும்பினார்.

இரு நாடுகளும் ஆயுதக் கொள்முதலைத் தவிர்த்து பொருளாதார முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டும், மேலும் காஷ்மீரைப் பொறுத்த வரை நடை முறைக்கு ஏற்ற தீர்வுக்கு முயற்சிக்க வேண்டும்.

1998 அணுகுண்டு சோதனைகள் நடைபெறாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும், ஆனால் அமைதிப் பேச்சு முறிவுக்கு கார்கில் போர்தான் காரணம் எனக் கூறினார். 1999-ம் ஆண்டு கார்கில் போர் நடந்த போது பாகிஸ்தான் பிரதமராக இருந்தவர் நவாஸ் ஷெரிப். இவர், இராணுவத் தளபதியாக இருந்த முஷரபால் நாடு கடத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது

# சுதந்திரதின கொண்டாட்டத்தில் பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு



(இஸ்லாமாபாத்)

பாக்கிஸ்தானின் சுதந்திர தினமான நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 13 பேர் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர்.

பலுசிஸ்தான் மாகாணத்தின் தேரா அல்லா யார் நகரில் உள்ள இரண்டடுக்கு உணவு விடுதியின் கீழ்த்தளத்தில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் இவர்கள் பலியாகினர்.

உணவு விடுதி மட்டுமல்லாது அருகே இருந்த கட்டடங்களும் தரை மட்டமாகின. கட்டட இடிபாடுகளில் சிக்கியவர்கள் மீட்கப்பட்டனர். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு இது வரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

# அமெரிக்க ஹெலியைப் பார்வையிட சீன பொறியியலாளர்களுக்கு அனுமதி

(நியூயோர்க்)

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட சம்பவத்தின் போது, சேதமடைந்த அமெரிக்க ஹெலிகொப்டரைப் பார்வையிட சீன பொறியியலாளர்களுக்கு பாகிஸ்தான் அனுமதியளித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மே மாதம் இரண்டாம் திகதி, பாகிஸ்தானின் அபோதாபாத்தில் மறைந்திருந்த ஒசாமா பின்லேடனை, அமெரிக்காவின் சீல் கடற்படையினரின் திடீர்த் தாக்குதல் நடத்திக் கொன்றனர். தாக்குதலுக்கு அவர்கள் பயன்படுத்திய ஹெலி கொபடர் ராடர் கண்களுக்கு சிக்காத வகையில் அதி நவீனமாகவும், புதுமையாகவும் தயாரிக்கப்பட்டிருநதது.

மேலும் தாக்குதல் நடத்திவிட்டு திரும்பும் போது, அதில் ஒரு ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கியது. ஹெலிகொப்டரை மீட்க முடியாததால், அதை குண்டு வீசி சேதப்படுத்தி விட்டு அமெரிக்க படையினர் சென்று விட்டனர்.

இவ்வகைக் ஹெலிகொப்டர்களை இதற்கு முன் கண்டிராததால் இது குறித்து பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், இந்த ஹெலிகொப்டரின் சிதைந்த பாகஙகளை சோதனையிட சீன பொறியியலாளர்களுக்கு பாகிஸ்தான் அனுமதியளித்திருக்கலாம் என கருதப்படுகிறது.

# கடற்படைத் தளத்திலிருந்து தாக்குதல் சிரியாவில் 24 பொதுமக்கள் உயிரிழப்பு

(சிரியா)

சிரிய கடற்படைத் தளத்திலிருந்து இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிரிய அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களை குறிவைத்து இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில் சனிக்கிழமை இரவு லடாகியா நகரை நோக்கி வந்த கடற்படைக் கப்பல்கள், கப்பலில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது தவிர இராணுவ பீரங்கிகளும் தாக்குதலில் ஈடுபட்டன. இதில் பொதுமக்களில் 24 பேர் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் படுகாயமடைந்தனர். இதில் பலரது நிலைமை கவலைக்கிடமாகவே உள்ளது.

பொதுமக்கள் வசிக்கும் பகுதியிலும் இராணுவம் தாக்குதல் நடத்தியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மற்றொரு கடற்கரை நகரமான பானியாஸ் நகரிலும் கடற்படையினர் இயந்திரத் துப்பாக்கிகள் மூலம் தாக்குதல் நடத்தினர்.

இப்பகுதிகளில் தகவல் தொடர்பை முற்றிலுமாக துண்டித்துள்ள இராணுவத்தினர் அங்கு தீவிரமாக தேடுதல் வேட்டை நடத்தி அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்தும் வருகின்றனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

என்னைப் பொறுத்தவரையில் ஜெயமோகன் எழுதும் இலக்கியம் குறித்த கட்டுரைகள் அவரது புனைகதைகளைவிட முக்கியமானவை என்பேன். அவரளவிற்கு நுணுகி ஆராய்ந்து இலக்கியத்தின் அழகியல் கூறுகளையும் இலக்கிய நுட்பங்களையும் இலக்கியங்களின் செல்நெறியையும் எழுதிய இன்னொரு ஆளுமை தமிழில் கிடையாது. மனிதர்களை அவதானிப்பதில் அவர் "எந்திரன்" போல இருக்கிறார். கிடைக்கும் ஒர் இடைவெளியில் வித்தியாசம் வித்தியாசமான மனிதர்கள் குறித்துப் பலவற்றைக் கிரகித்துவிடுகிறார். "பொதுவாக ஊர்ச் சண்டியர்களிடம் ஒரு சிறிய உடல் ஊனம் இருக்கும்" என்று ஒருமுறை எழுதியிருப்பார்... அது கல்வெட்டு. இந்த நுட்பமான பார்வைதான் இலக்கிய அழகியலின் அடிப்படை.

எஸ்.ராமகிருஷ்ணன் எழுத்துகளைப் படிக்கும்போது ஆஸ்பத்திரியில் யாரோ நோயாளியைப் பார்க்கச் சென்றது போலவே எனக்கொரு பீலிங். என்னுடைய வாசிப்பு அலைவரிசையில் எஸ்.ரா பொருந்துவதாகயில்லை. ஆனால் இன்று மிக அதிக இளைய வாசகர்களைப் பெற்றிருப்பவர் எஸ்.ராதான். "பாரிஸ் அறிவாலயம்" புத்தகக் கடையில் ஒரு நாளைக்குப் பத்துப் பேராவது எஸ்.ராவின் நூல்களைத் தேடி வருகிறார்கள்.

எலலோருக்கும் பிடித்தமாதிரி எவராலும் எழுதிவிட முடியாதல்லவா. டால்ஸ்டாயின் எழுத்துகளைப் பிடிக்காதவர்களைக் கூட நான் சந்தித்திருக்கிறேன். பிடிக்கவில்லையானால் வேறு எழுத்தாளர்களைத் தேடிப் படியுங்கள். புனைகதையாளர்களில் என்னுடைய வாசிப்பு அடிப்படையிலான எளிய பரிந்துரை: கு.அழகிரிசாமி, இலங்கையர்கோன், ப.சிங்காரம், பூமணி, கே.டானியல், பிரேம் - ரமேஷ், எஸ்.பொ, சு.வெங்கடேசன் (காவல் கோட்டம்), ஜெயகாந்தன், ஆதவன் தீட்சண்யா, தோப்பில் முகமது மீரான், ச. தமிழ்ச்செல்வன், நாஞ்சில் நாடன், குமார செல்வா.

இவர்களும் பிடிக்கவில்லையெனில் சொல்லுங்கள் இன்னொரு பட்டியல் தருகிறேன். தமிழ் இலக்கியம் பாலையல்ல, அது நெய்தல். முத்துகள், வலம்புரிச் சங்குகள், தங்க மீன்கள், சுறாக்கள், திமிங்கிலங்கள் இவ்விடம் கிடைக்கும்.

**- ஷோபா சக்தி**

தமிழில் ஜெயகாந்தன் முதல் கி. ராஜநாராயணன், சா. கந்த சாமி வரை அநேகமாக எல்லா எழுத்தாளர்களும் ஆங்கிலத் தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளார்கள். ஆனால் யாருமே தமிழ் நாட்டு எல்லையை விட்டே தாண்டவில்லை. தமிழ் நாட்டிலேயே சுற்றிக் கொண்டு வருவதற்கு ஏன் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட வேண்டும்? இதில் பல பிரச்சினைகள் உள்ளன. முதலில், மொழி பெயர்ப்புக் குறைபாடு. இல்லாவிட்டால் படைப்பே மூன்றாந் தரமாக இருக்கும். இது இரண்டுமே சரியாக இருந் தால் பதிப்பகம் படு சாதாரணமாக இருக்கும். வெறுமனே ஆங் கிலத்தில் வந்து விட்டால் போதுமா? அதை உலகம் முழுவதும் - குறைந்த பட்சம் அமெரிக்க, பிரிட்டிஷ் இலக்கிய வட்டத்தில் அதை எப்படிக் கொண்டு சேர்ப்பது? வி.எஸ். நைப்பாலுக்கு இணையானவர்தான் நம்முடைய அசோகமித்திரன். ஆனால் அவரும் கூட தமிழ்நாட்டு எல்லையைத் தாண்டவில்லையே?

இங்கே தமிழ் மொழியைக் காப்போம் என்று சத்தம் போடுகிறவர்கள் வெறுமனே மொழியை மட்டும் வளர்த்து விட்டால் போதும் என்று நினைக்கிறார்கள். கலாசாரம் வளராமல் மொழி எப்படி வளரும்? அப்துல் கலாம் எல்லோராலும் கொண்டாடப் படுபவர். ஆனால் அவருக்குப் பிடித்த நாவல் கள்ளிக்காட்டு இதிகாசம். பிடித்த நடிகர் விவேக். பிடித்த கவிஞர் பா. விஜய்யாக இருக்கலாம். இந்த ரீதியில்தான் தமிழ்ச் சமூகத்தின் அறிவுத் தளத்தில் இயங்குபவர்கள் அத்தனை பேரும் இருக்கிறார்கள். ஒரு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரை எடுத்துக் கொள்வோம். அவருக்குத் தெரிந்த இலக்கியவாதிகள் திருவள்ளுவர், கம்பர். அதிக பட்சம் போனால் பாரதி என்று சொல்லலாம். சமகால இலக்கியத்தில் யாரைப் பிடிக்கும் என்று கேட்டால் கலைஞர், வைரமுத்து என்பார். இப்படி இருந்தால் தமிழ் மொழி எப்படி வளரும்?

பாரிஸில் வசிக்கும் புலம் பெயர்ந்த வட ஆஃப்ரிக்க எழுத்தாளர்கள் அனைவரும் - குறித்துக் கொள்ளுங்கள், அனைவரும் - ஃப்ரெஞ்ச் சமூகத்தாலும், இலக்கியச் சூழலாலும் மிகப் பெரும் அளவில் கவனிக்கப்படுகிறார்கள். "அவர்களுக் கெல்லாம் ஃப்ரெஞ்ச் இரண்டாவது மொழியாயிற்றே?" என்று பதுங்கக் கூடாது. இங்கிலாந்தில் வாழும் தமிழர்களுக்கு ஆங்கிலம் தானே பொது மொழி? அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் ஃப்ரான்ஸில் வாழும் புலம் பெயர்ந்த வட ஆஃப்ரிக்கர்களை விட பல நூறு மடங்கு வசதியான நிலையில் இருப்பவர்கள்தானே? அந்தப் புலம் பெயர்ந்த வட ஆஃப்ரிக்கர்களுக்கு ஃப்ரெஞ்ச் எப்படியோ அப்படித்தானே அமெரிக்காவில் வாழும் தமிழர்களுக்கு ஆங்கிலம்? ஆனால் சாதித்தது என்ன? பொங்கலும் தீபாவளியும் கொண்டாடும் தமிழ்ச் சங்கங்கள்... அதுதான் அந்தத் தமிழர்களின் சாதனை. பாரிஸ் நகரில் உள்ள தமிழ்ப் புத்தகக் கடையில் க்யூவில் நின்று ரமணி சந்திரனை வாங்கிக் கொண்டு செல்கிறார்கள் குருவி படம் பார்க்கிறார்கள். இப்படிப் பட்ட அவல நிலையில் அந்நியர்கள் தமிழ்க் கலாச்சாரத்தையும் தமிழையும் எப்படி மதிப்பார்கள்?

**- சாரு நிவேதிதா**

# பேச்சை முறித்துக்கொண்டால் ஆயுதப்போராட்டமா?









தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் நடத்திய பத்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை படுதோல்வியில் முடிந்துள்ளதாக தமிழ்க் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. ஆனால் அரசாங்கத் தரப்பு இதுபற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ள வில்லை. அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்திவிட்டு அனல்பறக்கும் காரசாரமான வீரவசன அறிக்கைகளைக் கண்டபடி விடுவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வழமையான சமாச்சாரம். அதே போன்றே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகவே பத்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின்னரும் வெளியிடப்பட்ட அறிக்கைகளும், போட்டிகளும் காணப்பட்டன.

கடந்த ஒன்பது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போதும் அரச தரப்புடன் பேசிவிட்டு வெளியே வந்ததும் ஒன்றுமே நிறைவேறாதது போன்றும், அரச தரப்பை குறை கூறுவது போன்றுமே தமிழ்க் கூட்டமைப்பு அறிக்கைகளை விட்டுவந்தது. இவர்கள் எதிலுமே திருப்தி காண்பதாக இல்லை. அத்துடன் ஆற அமர இருந்து விட்டுக் கொடுத்து,பேசித் தீர்வினைக் காண முயல்வது போலவும் கூட்டமைப்பு இல்லை.

தமக்குச் சார்பான ஊடகங்களுக்கும், ஊது குழலாக இருக்கும் இணையத்தளங்களுக்கும் அறிக்கை விடுவதற்காக என்றே பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்கிறார்களோ என்றே எண்ணத் தோன்றுகிறது. பேச்சுவார்த்தைக்குப் போவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக இருந்தே வீர வசன அறிக்கைகளை விட்டெறிவார்கள். அதேபோன்று பேசிவிட்டு வந்த ஒரு வாரத திற்கு சூடுபறக்க அறிக்கைகளை மாறி மாறி விடுகிறார்கள்.

தமிழ்க் கூட்டமைப்பின் இச். செய்கையானது தமிழ் மக்கள் மத்தியில் ஒருவிதமான சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. தமது இருப்புக்களைத் தக்க வைப்பதற்காக இவர்கள் தமிழ் மக்களது அரசியல் அதிகாரங்களுடன் விளையாடுகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

காலக்கேடு, கோரிக்கை என்பது எல்லாம் அப்பட்டமான பொய் என்பது மக்களில் பலருக்குத் தெரியாது. அதாவது காலக்கெடு காலத்தினுள் அரசாங்கம் பதிலளிக்காவிட்டால் பேச்சுவார்த்தையிலிருந்து தமிழ்க் கூட்டமைப்பு விலகி விடும் என்று ஊடகங்களுக்கு அவர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்து அப்பட்டமான பொய் என்பதை சுமந்திரன் எம்.பி ஒப்புக் கொண்டுள்ளார். காலக்கெடு அவகாசம் காணாது என்றால் மேலும் கால அவகாசம் வழங்குவோமே தவிர பேச்சிலிருந்து ஒருபோதும் விலகிவிட மாட்டோம் என சுமந்திரன் எம்.பி உறுதிபடத் தெரிவித்திருக்கிறார். தமிழ் மக்களைத் தமிழ்க்கூட்டமைப்பு ஏமாற்றுகிறது என்பதற்கு இதனை விடவும் என்ன ஆதாரம் வேண்டும்? தமிழ்க் கூட்டமைப்பு வீரர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுமென்றே இவ்வாறு நடந்து கொள்கிறார்களா அல்லது எவராவது இதன் பின்னணியில் இருக்கிறார்களா என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும்.

கடந்த முப்பது வருடகால ஆயுதப் போராட்டத்தில் தோற்றுப்போன தமிழ்ச் சமூகத்திற்கு நியாயமான தீர்வு ஒன்று இன்று அவசியமாக உள்ளது. ஆனால் அதனைப் பெற்றுக்கொடுப்பது யார் எனும் கேள்வியே இன்று மேலோங்கியுள்ளது. விடுதலைப்புலிகளால் தமிழருக்கு விமோசனம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது உண்மையே. ஆனால் தமிழ் மக்களின எதிர்ப்பை அவர்கள் தமது தவறான ஆயுதப் போராட்டம் மூலமாக சின்னாபின்னமாக்கிவிட்டார்கள். புலிகளின் இராணுவ பலம் காரணமாகவே கடந்த அரசாங்கங்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண முயற்சித்தன என்று கூறப்பட்டது.

ஆனால் உண்மையில் தமிழருக்குப் பிரச்சினை உள்ளது. அதனை பேசித் தீர்த்து ஐக்கிய இலங்கையில் சமாதானமாக வாழ்வதே புத்திசாலித்தனம் என்ற நிலைப்பாடும் அரசாங்கங்களிடம் இருந்தது. இதனைப் புலிகளும், தமிழ்க்கட்சிகளும், தமிழரும் புலிகளின் அசைக்க முடியாத இராணுவ பலத்தினால் சிங்கள அரசுகள் பயந்துவிட்டன என்று கருதி வீண் இறுமாப்புக் கொண்டதே வரலாறு. இறுதியில் இராணுவ பலம் எல்லாமே புஸ் வாணமாகிப் போனகதை எல்லோருக்குமே தெரியும். அதனால்தான் தமிழனுக்கு இன்று இந்தக் கையேந்தும் நிலையும் ஏற்பட்டது.

இந்நிலையில் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கத்திற்குத் தன்னிடம ஏதோ படைப்பலம் இருப்பது போன்று படம்காட்ட முனைந்துள்ளது. தம்மிடம் மக்கள் பலம் இருப்பதாக இவர்களது நினைப்பு பிழைப்பைக் கெடுக்கிறது. இவ்வாறுதான் புலிகளும் தாமே உலகில் ஆயுதவலிமை கொண்ட போராட்டக்குழு என்ற மமதையில் இருந்தது. அதன்காரணமாக எல்லோரையும் ஆட்டிப்படைத்தது. இன்று புலிகளின் ஆயுதபலம் போன்று தம்மிடம் மக்கள் பலம் இருப்பதாகக் கூறி தமிழ்க்கூட்டமைப்பு அரசாங்கத்திற்குச் சவால் விடுத்துவருகிறது. பேச்சுவார்த்தையிலிருந்து விலகுவோம் என்றும் பயமுறுத்துகிறது.

பேச்சுவார்த்தையை முறித்துவிட்டு இவர்களால் அரசிற்கு எதிராக ஆயுதம் ஏந்தியா போராட முடியும்? மக்களைத் திரட்டி கூட்டங்களை நடத்தி ஆர்ப்பாட்டத்தை நடத்த முடியும். அவ்வளவுதான், அல்லது வெளிநாடுகளுக்கு ஓடிச்சென்று . அரசாங்கத்திற்கு எதிராக பிரசாரங்களை மேற்கொள்ள முடியும். குறிப்பாக இந்தியாவிற்கு தமது குறைகளைக் கூறி தீர்வுக்கு உதவுமாறு கோர முடியும்.

இவற்றை விடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இதயசுத்தியுடனும், விட்டுக்கொடுப்புடனும் பேச்சுவார்த்தை நடத்த முன்வருமாயின் இனப்பிரச்சினைக்கு விரைவான தீர்வினைக் கண்டுவிடலாம். இந்தியாவிற்கும், லண்டனுக்கும் ஓடுவதால் எந்தப் பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை என்பதைக் கூட்டமைப்பினர் உணர்ந்து கொள்ளவேண்டும்.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தட்டிக்கழித்தாலும் தமிழ் மக்களுக்கான தீர்வு ஒன்றினைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. இதனைப் பொறுப்பு என்று கூறுவதிலும் பார்க்க அரசாங்கத்தின் கடமை என்று கூறினாலும் சரியே.

வடக்கு கிழக்கில் பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப் பெற்ற கட்சி என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக அம்மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய முயற்சித்தது. அதனாலேயே அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன தீர்வு குறித்துப் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தி வந்தது.

ஆனால் இதனைப் புரிந்துகொள்ளாத தமிழ்க் கூட்டமைப்பினர் இதனை அரசாங்கத்தின் பலவீனமாகக் கருதி செயற்பட முனைந்தனர். அதனாலேயே அரசாங்கத்துடன் நடத்திய ஒன்பது சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் அலட்சியத்துடன் கூட்டமைப்பு பங்குகொண்டது. வெளியே வந்து அரசிற்கு எதிராக அறிக்கை விடுவதற்காகவே இத்தனை சுற்றுப் பேச்சுக்களிலும் இவர்கள் கலந்துகொண்டார்களோ என்று எண்ணத் தோன்றும் அளவிற்கு கூட்டமைப்பின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

கடந்தவாரம் நடைபெற்ற பத்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் கூட்டமைப்பு தனது சுயரூபத்தைக் காட்டியது. குறுகிய காலத்தில் நிறவேற்ற முடியாத மூன்று கேள்விகளுக்கு இருவாரத்தினுள் பதில் தருமாறு அரசிடம் கோரிக்கையை முன்வைத்தது. இது நடைமுறைக்குச் சாத்தியமாகாது எனத் தெரிந்திருந்தும் இப்படி மடக்கினால் தானே தமிழ் மக்களிடம் நல்ல பெயர் வாங்கலாம் என்பதற்காக முட்டாள்த் தனமான செயலில் கூட்டமைப்பு இறங்கியது.

பொறுமையிழந்த காரணத்தினாலேயே அரசாங்கத்தரப்பும் பதிலுக்கு காரசாரமானதொரு பதில் அறிக்கையை விடுத்திருந்தது.

பேச்சில் கலந்துகொள்ளாவிடின் விலகிக் கொள்ளுங்கள், இனி நாடாளுமன்றத் தெரிவுக குழு மூலமாக தீர்வைக்காண முயற்சிப்போம் என்பதாக அரசின் பதில் அமைந்திருந்தது.

பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. அரசாங்கம் பொறுமையைக் கடைப்பிடித்தது. ஆனால் தமிழ்க் கூட்டமைப்பு அதனைத் தவறாகப் புரிந்து செயற்பட்டுள்ளது. இப்போது யாருக்கு நஷ்டம்?

- நன்றி: பூந்தளிர்

# தமிழ் மக்களையும் புலிகளையும் பலியாக்கியதில் தமிழ் ஊடகத்துறையினருக்கும் பெரும் பங்குள்ளது!

அஹிம்சை வழியிலான தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை தமிழ் இளைஞர் கைகளில் ஆயுதம் ஏந்த வைத்து ஆயுதப் போராட்டமாக மாற்றியமைத்து அவர்களைப் பயங்கரவாதிகளாக்கி கூண்டோடு கைலாயம் அனுப்பியதில் தமிழ் அரசியல் வாதிகளுக்கு நிகராக தமிழ் ஊடகத்துறையினருக்கும் பெரும் பங்குள்ளது.

தமது அரசியல் இருப்பிற்காகத் தமிழ் இளைஞர்களை தமிழ் அரசியல்வாதிகள் எந்தளவிற்கு உசுப்பேற்றி உயிரையும் மதிக்காது போராட்டத்திற்குள் தள்ளிவிட்டார்களோ அந்தளவிற்கு தமிழ் ஊடகங்களும் தமிழ் இளைஞர்களுக்கு உணர்வுகளைத் தூண்டி தமது இலாபத்தை நோக்காகக் கொண்டு செயற்பட்டதை, செயற்பட்டு வருவதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

இதனை அவர்கள் தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுப்பதாகக் கருதினால் சிங்கள ஊடகங்களும், சிங்கள அரசியல்வாதிகளும் நடந்து கொள்வதையும் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். அவர்கள் இனவாதமாகச் செயற்படுகிறார்கள் என நாம் கருதினால் தாம் செய்வதும் இனவாதமே என்பதை தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் ஊடகங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதற்காக 1956 கலவரம், 1983 கறுப்பு ஜுலை, காத்தான்குடிப் படுகொலை, அம்பாறை வீரமுனைப் படுகொலை, செஞ்சோலை கொலை, நவாலி தேவாலய படுகொலை அழிஞ்சிப்பொத்தானை என்பவற்றை நாம் தமிழ் ஊடகங்களில் கண்டிக்காது இருக்க முடியாது. அதேபோன்று கெக்கிராவ படுகொலை, அரந்தலாவ பிக்குகள் கொலை, ஹொரவப் பொத்தானை கொலைகளை சிங்கள ஊடகங்கள் கண்டிக்கவே செய்யும்.

இப்போது கொலைக் கலாசாரம் எல்லாமே முடிவிற்கு வந்துள்ளது. இனிமேலும் பழையவற்றைக் கிளறுவதில் எவ்விதமான பலனும் கிடையாது. அது மேலும் பகைமை உணர்வையே வளர்க்கும். அதனை எம்முடன் விட்டுவிட்டு எமது எதிர்காலச் சமுதாயத்திற்கு நல்லவற்றை எடுத்துக் கூறுபவர்களாக நடந்து கொள்ளவேண்டும்.

தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் ஊடகத்துறையினரும் இனிமேலாவது இன ஒற்றுமையை ஏற்படுத்தி புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண ஒத்துழைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் தமது இருப்பிற்காகவும், தமது வளர்ச்சிக்காகவும் இவ்விரு தரப்பினரும் செயற்படக் கூடாது.

தமிழ் மக்கள் இதுவரை பட்ட உயிரிழப்புக்கள், சொத்திழப்புக்கள், துன்பங்கள், மன உளைச்சல்கள் போதும். இனியுமொரு துயர வாழ்வை எதிர்கொண்டு அதைத் தாங்கும் சக்தி அம்மக்களுக்கு இல்லை. இதனை உணர்ந்து வாழும் இந்தச் சொற்ப காலத்தில் விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு மற்றும் சகோதரத்துவத்துடன் இன்பமாக வாழ வேண்டும்.

எனவே இனிமேலாவது தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் ஊடகத்துறையினரும் தமிழ் மக்கள் நலன் கருதி பொறுப்புணர்வுடன் தங்களது கடமைகளை மேற்கொள்வார்கள் என நம்புவோம்.

# லண்டனில் இலங்கை மாணவர்கள் தேவையற்ற அச்சம் வேண்டாம்

(கொழும்பு)

வெளிநாட்டில் கல்விக் கற்கவெனச் சென்று பிரித்தானிய லண்டனில் நிர்க்கதியாகியுள்ள இலங்கை மாணவர்கள் குறித்து அநாவசிய பீதியடையத் தேவையில்லை என பிரித்தானியாவிலுள்ள இலங்கை தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

இந்த நிர்க்கதியான மாணவர்கள் தொடர்பில் தூதுவராலயம் ஊடாக ஆராய்ந்து வருவதாகவும் அவர்களுடைய பிரச்சினைத் தொடர்பில் தலையிட முன்வந்துள்ளதாகவும் இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் குடிவரவு மற்றும் தூதுவர் நடவடிக்கை தொடர்பான அமைச்சின் ஆலோசகர் சமிந்த குலரட்ன அததெரணவிற்குத் தெரிவித்தார்.

லண்டன் உயர்கல்வி நிறுவனம் மூடப்பட்டுள்ளதால் நிர்க்கதியானவர்களில் 38 இலங்கை மாணவர்களின் பெயர் உயர்ஸ்தானிகராலயத்திற்கு தற்போது கிடைத்துள்ளதெனவும் சுமார் 80 இலங்கை மாணவர்கள் இவ்வாறு நிர்க்கதியாகியுள்ளதாக அறியக்கிடைப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவர்களை பிரிட்டனுக்கு அழைத்துச்சென்ற இரு நிறுவனங்களும் மாணவர் ஒருவரிடம் இருந்து சுமார் 15 லட்சம் ரூபா என்ற ரீதியில் 12 கோடி ரூபா வரையிலான தொகையை மோசடி செய்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இந்த மாணவர்களின் பிரதிநிதிகள் சிலர் லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளதாகத் தூதரக அமைச்சு ஆலோசகர் சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார்.

# கிரகத் துணிக்கைகள் பூமியை நோக்கி

கிரகங்களில் இருந்து துணிக்கைகள் பூமிக்கு விழுவதை காண்பதற்கான அரிய சந்தர்ப்பம் இலங்கை மக்களுக்கு தற்போது கிடைத்துள்ளது. நேற்று முன்தினம் ஆரம்பமான இந்த கிரகங்களின் துணிக்கைகள் விழுதலை எதிர்வரும் சில தினங்கள் அதிகாலை 2 மணிக்குப் பின்னர் பார்க்க முடியும் என இலங்கை வானியல் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் காவன் ரத்னதுங்க குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் அண்மையில் பூரணை ஏற்பட்டமையாலும் முகில்கள் அதிகளவில் காணப்படுகின்றமையாலும் இதனை மிகவும் தெளிவாக பார்க்க முடியாதுள்ளதாக அவர் கூறினார்.

# அதிக மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில்

(அம்பலப்பெருமாள்)

நடைபெற்றுக்கொண்டிருக்கும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு இம்முறை கிளிநொச்சி கல்வி வலயத்திலிருந்து 1449 பேர் தோற்றுவதாக கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்கள புள்ளி விபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன் பிரகாரம் இவ்வலயத்திலிருந்து புதிய பாடத்திட்டத்தின் கீழ் 483 மாணவர்களும் பழைய பாடத்திட்டத்தின் கீழ் 466 மாணவர்களும் தோற்றுவதாகத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (121)

# நவாலியில் இன்று நடமாடும் சேவை

(ஆனைக்கோட்டை)

யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் நடமாடும் செயலகம் ஒன்று. இன்று நவாலி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் காலங்கடந்த இறப்பு, பிறப்பு பதிவுகள், தேசிய அடையாள அட்டை போன்ற சேவைகளை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

இப்பிரதேச மக்கள் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு மேற்படி நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (104)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யா/தாவடி இ.த.க. பாடசாலைக்கு (வகை - II பாடசாலை) அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 - I, 2 - II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும், இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, 2-I, 2-II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணபபப்படிவத்தை எதிர்வரும் 26.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# பாடத்திட்டத்திற்குப் புறம்பான வினாத்தாள்கள் உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள் ஆதங்கம்

இம்முறை க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிய உயிரியல் பிரிவு வினாத்தாள்களில் பல்வேறு குறைபாடுகளுடன் கூடிய வினாக்கள் இணைக்கப்பட்டிருந்ததாகவும் விடையளிக்கச் சிரமாமாக இருந்ததாகவும் மாணவர்கள் குற்றம் சாட்டினர்.

தாம் பயிற்சிகளில் ஈடுபட்ட வேளையில் மாதிரி வினாத்தாள்களில் அடங்கியிருந்த முறைகளுக்கு மாறாக மேற்படி வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டிருந்ததாக நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த மாணவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதனை உறுதிப்படுத்தும் முகமாக மாணர்களுக்குக் கல்வி கற்பித்த விரிவுரையாளர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். எனினும் இது தொடர்பாகப் பல்வேறு மாறுபட்ட தகல்கள் வந்தவண்ணம் உள்ளன.

# யாழ். நகரில் விபத்து; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் நின்றுகொண்டிருந்தவர்கள் மீது வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவரும் பலத்த காயங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று மதியம் 1.00 மணியளவில் பெருமாள் கோவிலடியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கோப்பாய் பூதரமடத்தைச் சேர்ந்த நீலவர்ணன் (வயது 30) கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த தியாகராசா (வயது 60) என்பவர்களே படுகாயங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளதுடன் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எஸ்)

# பெண்கள் துஷ்பிரயோகம் மோசடிக்குழு கைது

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த சிறுமிகளை அழைத்துச் சென்று, போலி அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டுகள் தயாரிக்கப்பட்டு, வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கும் சம்பவங்களுடன் தொடர்புடைய பெண் ஒருவர் உட்பட இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்த 6 சிறுமிகள் மீட்கப்பட்டுள்ளனர் எனவும் காவற்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் மருதானை பொலிசாரினரால் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப் பட்டவர்கள் ஒருவர் இந்த குற்றச் செயலுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் 36 வயதான முஸ்லீம் எனவும் கைது செய்யப்பட்ட பெண்மணி 74 வயதானவர் எனவும் மருதானை காவற்துறையினர் தெரிவித்துள்ளனர். மீட்கப்பட்ட 6 சிறுமிகளில் 17 வயதான சிறுமி ஒருவர் குறித்த பிரதான சந்தேக நபரினால் பாலியல் வல்லுறவுக்கு உட்ப டுத்தப்பட்டுள்ளதாகவும் காவற்துறையினர் குறிப்பிட்டுள்ளனர்.

## உதயன் குகநாதனை...

நோக்கில் விசாரணைகள் தொடர்வதாகவும், யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த சின்னவன் எப்படி கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டார். என்றும் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த விசாரணைகளின் முடிவில் இத்தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் அடையாளம் காணப்பட்டு விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று பொலிசார் தெரிவித்தனர்.

## கடற்தொழிலுக்கு...

நிலையில் இரண்டு வருட கால பகுதியில் மீன்பிடித்துறை நடவடிக்கைகளை 50 சத வீதமாக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது தவிர இந்த மாகாணத்தைச் சேர்ந்த மீனவர்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் அமைச்சினால் அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெரிவுக்குழு...

சுமந்திரன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தென்பகுதியில் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற கட்சி. அதேபோல, வடபகுதி மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றகட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. எனவே, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைபபதற்கு முன்னர் எம்முடன் அரசாங்கம் விரிவான கலந்துரையாடலொன்றை நடத்த வேண்டும் என்றே நாம் கூறியிருக்கின்றோம். இதுவரை நாம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை எதிர்க்கவில்லை. அரசாங்கம் விளக்கமளித்த பின்னர் தெரிவுக்குழுவில் கலந்து கொள்வதா? இல்லையா? என்பது பற்றித் தீர்மானிக்கமுடியும். தெரிவுக் குழுவுக்கு முன்மொழிவுகளை வழங்க அரசாங்கம் ஆறுமாத காலம் வழங்கியுள்ளது. இது மிகவும் நீண்டகாலமாக அமைந்துள்ளது. பின்னர், இந்த ஆறுமாதத்தை மேலும் நீடிக்கும் தந்திரமாகப் பயன்படுத்தலாம். எனவே, தெரிவுக்குழுவின் காலம் பற்றி தெளிவுபட அறிவிக்க வேண்டும். அத்துடன், அரசாங் கத்துடன் நடத்தப்பட்டுவந்த பேச்சுவார்த்தைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவித மான காலக்கெடுவையோ அல்லது நிபந்தனையையோ விதிக்கவில்லை என்றும் சுமந்திரன் தனது செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## வரட்சியின்...

இந்தப் பிரச்சினை தொடர்பாக அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அண்மைக்காலமாக மாடுகள், ஆடுகளை வெளியிடங்களுக்கு கொண்டுசெல்வதற்கும் தங்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாகப் பெயர் குறிப்பிடாத பிரதேசவாசி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற நெடுந்தீவு ஒருங்கிணைப்புக் கூட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டு பல முடிவுகள் எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. (எப்.எஸ்)

# நாவற்குழியில் விபத்து மீன் வியாபாரி காயம்

(நாவற்குழி)

நாவற்குழிப் பகுதியில் நாய் குறுக்கே ஓடியதில் மோட்டார் சைக்கிள் விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கைதடி - நாவற்குழி பகுதியைச் சேர்ந்த மீன் வியாபாரியான பிள்ளைநாயகம் சிவகுருநாதன் (வயது - 40) என்பவரே படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ். குடாநாட்டின் வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றமை குறிப்பிடத் தக்கது. (எஸ்)

# இந்தியக் கொடி நாட்டுவதற்கு கச்சதீவு சென்றவர்கள் கைது


(கொழும்பு)

கச்சதீவில் இந்திய தேசியக் கொடியேற்றவென கடல் பிரயாணத்தை மேற்கொள்ள முயற்சித்த இந்து மக்கள் கட்சியைச் சேர்ந்த 43 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இந்து மக்கள் கட்சியின் மாநிலக்குழுத் தலைவர் அண்ணாத்துரை உட்பட்ட உறுப்பினர்கள் படகுதுறையில் படகில் ஏறி கச்ச்தீவு செல்ல முயற்சித்த போது இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

## செய்திப்பாணம்

**சர்வதேச மட்டத்தில் அறுக்கின்ற சிறிலங்கா கர்வமாக ஆதரவை காட்டுகிறது - நிர்மூலமாய் போவதனைத் தடுப்பவர் போரதனில் மாண்டோரா ஆவதனைக் கெத்தியாக ஆக்கு!**



# யாழ். குடாவுக்கு குடிநீர் கொழும்பில் விசேட மாநாடு



(யாழ்ப்பாணம்)

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். மாவட்டத்திற்கு குடிநீர் எடுத்துவரும் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்கான நீர் விநியோகக் குழாய்கள் பொருத்தும் வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அரச அதிபர் கடந்த வெள்ளிக்கிழமையன்று கொழும்பில் இத்திட்டம் சம்பந்தமான தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கூட்டமொன்றில் தாம் கலந்துகொண்டதாகவும் தெரிவித்தார்.

குறித்த திட்ட நடைமுறைகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதுடன் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்களுக்கான அனுமதிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார்.


இத்திட்டத்திற்கு மொத்தமாக 164.04 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அதில் ஆசிய அபிவிருத்தி வங்கியானது 90 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தற்போது இரணைமடுக் குளத்தின் கொள்ளளவு 77500 அடியாகவுள்ளதாவும், இத்திட்டத்தின்படி குளம் முழுமையாக 2 அடி உயர்த்தி புனரமைத்ததின் பின்னர் ஒரு லட்சத்து 6 ஆயிரம் ஏக்கர் அடியாக நீர் அதிகரிக்கும். அதனைவிட இத்திட்டம் பூர்த்தியாகும் பட்சத்தில் இக்குளத்தின் கொள்ளளவு ஒரு லட்சத்து 26 ஆயிரம் ஏக்கர் அடியாக இருக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இரணைமடுக் குளத்தில் சேகரிக்கப்படும் மேலதிகமான நீரிலிருந்து யாழ். மாவட்டத்திற்கும் பூநகரி, பளை ஆகிய பகுதிகளுக்கும் இத்திட்டத்தின் மூலம் குடிநீர் எடுத்துச்செல்லப்படவுள்ளது எனவும் அரச அதிபர் குறிப்பிட்டார்.

அத்துடன் இத்திட்டத்திற்கு கிளிநொச்சி மாவட்ட மக்கள் அரச அதிபர் மற்றும் அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கொழும்பில் இந்திய முதலீடு



(கொழும்பு)

கொழும்பு நகரில் பாரிய குடியிருப்பு மற்றும் வர்த்தக அங்காடிகளைக் கொண்ட தொகுதி ஒன்றினை நிர்மாணிப்பதற்கு இந்திய நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டத்திற்காக 40 கோடி அமெரிக்க டொலர்களை செலவிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கங்காரமையாவிற்கு அருகாமையில் அமைந்துள்ள இரண்டு ஏக்கர் காணியில் இந்த திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் கொழும்பு நகரம் மேலும் அபிவிருத்தியடைவதுடன் வீட்டுமனைத் தொகுதி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சாதகமான தன்மைக்கு இட்டுச் செல்லும் என நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஜானக குருகுலசூரிய தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த பிரதேசத்தில் மேலும் 8 ஏக்கர் நிலம் முதலீட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கட்சியை ஊடகங்களால் நிர்வகிக்க முடியாது

## ஐ.தே.க. உறுப்பினர் கஸ்தூரி அநுராதநாயக்க

சஜித் குழு ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து மாகாண சபை உறுப்பினர்களும் கட்சியின் தலைமை மாற்றத்திற்கு ஒத்துழைத்ததாகக் கூறிய செய்தி தவறானது என கருத்து வெளியிட்ட வட மத்திய மாகாண சபை எதிர்கட்சித் தலைவர் கஸ்தூரி அநுராதநாயக்க குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 113 மாகாண சபை உறுப்பினர்களில் 20 பேரே சஜித் குழு சார்பில் சமூகமளித்திருந்ததாக கூறிய அவர், அவர்கள் பலாத்காரமாகவும் அமைப்பாளர் பதவி பறி போகும் என்பதையும் கருத்திற்கொண்டுமே சமூகமளித்ததாக கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தை ஊடகங்கள் மூலம் நடத்திச் செல்ல முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மர்ம மனிதர்கள் அதிகாலையில் அதிரடி கிண்ணியா பள்ளிவாசலில் ஐவர் காயம்



கிண்ணியா மத்திய பள்ளிவாசலுக்குள் நேற்று அதிகாலை 3 மணியளவில் புகுந்த மர்ம மனிதர்கள் 10 பேர், தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதில் 5 பேர் அடிகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, கிண்ணியாவில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் காரணமாக பொதுமக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஏற்பட்ட கைகலப்பில் ஐந்து பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், பொலிஸாரின் ஜீப் வண்டியொன்றும் நேற்றிரவு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மர்ம மனிதர்கள் பெண்களுடன் சேஷ்டையில் ஈடுபட முற்பட்ட வேளையில் அவர்கள் கூச்சலிட்டதைத் தொடர்ந்து அங்கு ஒன்றுகூடிய பொதுமக்கள் அம்மர்ம மனிதர்களை துரத்திச்சென்றபோது அம்மர்ம மனிதர்கள் கிண்ணியாவிலுள்ள கடற்படை முகாமுக்குள் ஓடி ஒளிந்து கொண்டனர்.

இந்த நிலையில், பொதுமக்கள் கடற்படை முகாம் மீது கற்களால் வீசி தாக்குதல் நடத்திய போது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன்போது இரு பொலிஸார் பொதுமக்களின் கல்வீச்சுக்கு இலக்காகி காயமடைந்துள்ள அதேவேளை, பொதுமக்கள் மூவர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இரு பொலிஸாரும் பொதுமக்கள் மூவரும் உடனடியாக கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இரு பொதுமக்களின் நிலைமை கவலைக்கிடமான நிலையில் திருகோணமலை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்களையடுத்து, கிண்ணியாவில் பொலிஸாரினதும் இராணுவத்தினரதும் பாதுகாப்பு பலப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸியில் கடன் அட்டை மோசடி இலங்கையர் உட்பட ஐவர் கைது

(கொழும்பு)

அவுஸ்திரேலியா முழுவதிலும் வங்கி அட்டை முறைமை மீது நடந்த தாக்குதலுக்குப் பொறுப்பான சர்வதேச மோசடி வலையமைப்பின் அங்கத்தவர்களாக இருந்ததாக மலேஷியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த ஐந்து பேர் திங்கட்கிழமை குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

இந்த மோசடி கூட்டமைப்பின் நடவடிக்கைகளை அவுஸ்திரேலியா, ஐரோப்பா, வடஅமெரிக்கா ஆகிய நாடுகளில் இணைப்பு செய்ததாக சந்தேகிக்கப்பட்ட இந்த நபர்களை பல மாதங்களாக கண்காணித்ததை தொடர்ந்து இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக நியூசௌத் வேல்ஸ் மாநில மோசடிக் குழுவின் புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மோசடி குழுவானது பணக் கொடுக்கல், வாங்கல் செய்ய இயந்திரங்களை மக்கள் பயன்படுத்தும்போது கடன் அல்லது முற்கொடுப்பனவும் அட்டைகளின் காந்தக் கீலத்திலிருந்து கணக்கின் விவரங்களை களவாக பிரதி செய்யும் அதி முன்னேறிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதாக கூறப்படுகிறது.

வங்கிக் கொடுப்பனவுகளை செய்யும் இயந்திரங்கள், மடிக்கணினிகள், பணம், போலி பயண ஆவணங்கள் மற்றும் கனேடிய கடன் அட்டைகள் என்பவற்றை இவர்களிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# மர்ம மனிதர்கள் பீதி இதுவரை 200 பேர் கைது



(கொழும்பு)

மர்ம மனிதர்களாக போலி நாடகமாடிய 200 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டிருக்கும் அனைவரும் ஆண்கள். உண்மையில் இவர்கள் பேயோ பூதமோ அல்லது மர்ம மனிதர்களோ இல்லை.

மக்களால் சித்தரிக்கப்பட்டிருக்கும் மர்ம மனிதன் எனும் நாமத்தை சாதகமாகப் பயன்படுத்தி திருடர்களும் கொள்ளையர்களும் வெண்சந்தன மரக் கடத்தல்காரர்களுமே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கஞ்சா போதைப்பொருள் பாவனையாளர்களும் காம வெறியர்களும் இதனை சாதகமாகக் கொண்டு பெண்களுடனான சேஷ்டைகளை அதிகரித்துள்ளனர். இவ்வாறானவர்களையே நாம் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளோம்.

தற்போது பரவலாகப் பேசப்பட்டுவரும் இந்த மர்ம மனிதர்களை முற்றாக ஒழிக்கவேண்டுமாயின் முதலில் எமது மக்களின் மனோநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

மர்ம மனிதர்களோ பூதங்களோ அல்லது பேய்களோ இங்கு நடமாடவில்லை என்பதை அவர்கள் மனப்பூர்வமாக நம்ப வேண்டும். இதற்காக நாம் நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றோம் என்றார்.

# கடத்தப்பட்ட கப்பல் கொழும்பு வருகிறது

(கொழும்பு)

சோமாலியா கடற்கொள்ளைக் காரர்களால் கடத்தப்பட்ட எம். வி. சினின் கப்பல் அடுத்த வாரமளவில் கொழும்பை வந்தடைய உள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் கடத்தப்பட்ட எம். வி. சினின் கப்பல் பல மாதங்களாக முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையையடுத்து சோமாலியர்களால் கடந்த சனிக்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளது.

# 7 ஆம் மாத நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 16 | | 29 |
| 08 |  | 01 |
| 1981 | | 2011 |

## இரத்தினசிங்கம் சதீஸ்

நினைவுகள் இன்னும் நீங்கவில்லை
நினைவிருக்கிறது ஒருநாள்
கனவுபோல் உனது உடல்
கிடந்துக் கண்டோம் உயிரின்றி
மனம் இப்போதும் பதறுகிறது
மரணம் உனைத் தழுவியதால்
தினம் வரும் நினைவுகள்
திரும்பி நீ வருவாயா?
பிறந்த நாள் இன்றுனது
முப்பதாகிப் போயிற்று
சிறந்த நாளே நீயிருந்தால்,
சீக்கிரமே போய்விட்டாய்
மறந்தும் நாம் ஒருபோதும்
மன்னிப்பதில்லை உன் மரணத்தை
பிறந்தாலும் மறுபடியும் நீ
வந்துவிடு எங்களிடம்

தகவல்
தோழர்கள்

(இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒகஸ்ட் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.